பக்கங்கள் 31

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஐப்பசி 03 திங்கட்கிழமை 20.10.2025 | அதிர்வு 81




# சகலரினதும் சுதந்திரம், கண்ணியத்தை பாதுகாக்கும் நாட்டை உருவாக்குவோம்!

## தீபாவளி வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி அநுர உறுதி

“அனைவரும் தங்கள் அனைத்து சிவில் – அரசியல் – கலாசார உரிமைகளையும் தடையின்றி அனுபவிக்கக்கூடிய அனைவரின் சுதந்திரமும் கண்ணியமும் பாதுகாக்கப்படும் ஒரு பாதுகாப்பான நாட்டைக் கட்டியெழுப்பவும் நாங்கள் உறுதி பூண்டுள்ளோம்.” – என்று தனது தீபாவளி வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி 03▶



# பொறுப்புக்கூறலுக்கு 1,12,348 ஆவணங்கள் திரட்டியுள்ளது ஐ.நா.



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தில் இயங்கி வரும் இலங்கை பொறுப்புக் கூறல் செயற்றிட்டத்தால் இலங்கையில் இடம்பெற்ற மீறல்கள் தொடர்பில் கடந்த செப்டெம்பர் முதலாம் திகதி வரையான காலப் பகுதியில் மொத்தமாக ஒரு இலட்சத்து 12 ஆயிரத்து 348 ஆவணங்கள் திரட்டப்பட்டுள்ளன. அவற்றில் 7 ஆயிரத்து 459 ஆவணங்கள் திறந்த மூலங்களில் இருந்து கிடைக்கப் பெற்றவையும், ஒரு இலட்சத்து 4 ஆயிரத்து 889 ஆவணங்கள் இரகசிய 02▶


# நாடாளுமன்றத்தில் தற்போது பலவீனமடைந்த எதிர்க்கட்சி!

## முன்னாள் ஜனாதிபதி ரணில் கவலை

“நாடாளுமன்ற ஜனநாயகத்தில் எதிர்க்கட்சியின் செயற்பாடுகள் மிக முக்கியம் என்பதை உணர வேண்டும். ஆனால் இன்று எதிர்க்கட்சி பலவீனமாகவே உள்ளது.”

– இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய மற்றும் எதிர்கால அரசியல் போக்கு குறித்து ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினரான வருண ராஜபக்ஷ மற்றும் முன்னாள் இராணுவத் தளபதி 03▶






யாழ்ப்பாணத்தில் சர்வதேச கிரிக்கெட் மைதானம் ஒன்றை அமைப்பதற்கான ஏற்பாடுகள் அவசர அவசரமாக ஆரம்பிக்கப்பட்டன. அதே வேகத்தில் அடிக்கல் நாட்டும் நிகழ்வும் இடம்பெற்றது. ஜனாதிபதி அனுர குமார திஸநாயக்க நேரில் வந்து அடிக்கல் நட்டார். அப்போதே இது அரசியல் நோக்கத்திற்காக அவசர கோலத்தில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கை என்று விமரிசிக்கப்பட்டது.

அரசியல் நோக்கங்கள் புதைந்து கிடப்பதால் அடிக்கல் நட்டுதுமே – அந்த வேகத்திலேயே – பூர்வாங்க வேலைகளுக்கான கேள்விப் பத்திரங்களும் கோரப்பட்டு வேலைகளும் தொடங்கிவிட்டன. 02▶

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## இரகசியம் பரகசியம்...

ஆயினும், எதிர்பார்க்கப்பட்டபடி சர்ச்சைகள் கிளம்பிவிட்டன.

ஆனால் இத்தகைய நடவடிக்கைகளை முன்னெடுக்க முன்னர் செய்யப்பட வேண்டிய சட்ட ரீதியான அடிப்படை ஏற்பாடுகள் – முன்னாயத்தங்கள் – மேற்கொள்ளப்படவில்லை என்று தெரிவித்து அந்த நடவடிக்கைகளைக் கண்டித்திருக்கின்றது வனவிலங்கு மற்றும் இயற்கை பாதுகாப்பு சங்கம் (Wildlife & Nature Protection Society - WNPS)

சுற்றுச்சூழல் பாதிப்பைக் கருத்தில் கொண்டு, மண்டைதீவு தீவில் அமைக்கப்பட உள்ள முன்மொழியப்பட்ட யாழ்ப்பாண சர்வதேச கிரிக்கெட் மைதானம் மற்றும் விளையாட்டு வளாகம் தொடர்பான அனைத்து கட்டுமான மற்றும் ஆயத்த நடவடிக்கைகளையும் உடனடியாக நிறுத்துமாறும் அது அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

கிரிக்கெட் மைதானம் அமைய இருக்கும் பிரதேசத்தை 'தீவு' என்றே அந்த அமைப்பு அடையாளப்படுத்தியுள்ளது.

உப்பு சதுப்பு நிலங்கள், சேற்றுப் பள்ளத்தாக்குகள், உப்பு சதுப்பு நிலம் – சதுப்பு நில சூழல், கடல் புற்கள் மற்றும் விரிவான இயற்கை சதுப்பு நில வாழ்விடங்களைக் கொண்ட தீவு சுற்றுச்சூழல் ரீதியாக உணர்திறன் வாய்ந்த மற்றும் சுற்றுச்சூழல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த பகுதி என்று அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

தேவையான சுற்றுச்சூழல் மதிப்பீடுகளை முடிக்காமல் அடிக்கல் நாட்டப்பட்டமை இப்போது தெரியவந்துள்ளது. இது இலங்கையின் சுற்றுச்சூழல் சட்டங்களை தெளிவாக மீறுவதாகும் என்று சங்கம் தெரிவித்துள்ளது.

கடலோர பாதுகாப்பு மற்றும் கடலோர வள முகாமைத்துவச் சட்டத்தின் (CC&CRMA) கீழ், கடலோர மண்டலத்திற்குள் எந்தவொரு மேம்பாட்டு நடவடிக்கையும் முதலில் ஆரம்ப சுற்றுச்சூழல் பரிசோதனை (IEE) அல்லது சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டை (EIA) மேற்கொண்ட பின்னரே முன்னெடுக்கப்பட வேண்டும். அப்படிச் செய்தால்தான் குறிப்பிட்ட மேம்பாட்டு செயல்பாடு நிலையானது மற்றும் திட்டத்தின் அனைத்து சாத்தியமான சுற்றுச்சூழல் விளைவுகளும் அடையாளம் காணப்பட்டு, போதுமான அளவு தடுப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு பாதிப்புகள் குறைக்கப்பட முடியும்.

இது தொடர்பான சட்ட விதிகள், பிரிவுகள், ஏற்படக் கூடிய பாதிப்புகள், தாக்கங்கள் பற்றி எல்லாம் கோடி காட்டி அந்த அமைப்பு அரசுக்கு ஓர் அறிக்கை சமர்ப்பித்துள்ளது எனத் தெரிய வருகின்றது.

தேவையான சுற்றுச்சூழல் மதிப்பீடுகளை நடத்துவதற்கு முன்பு அடிக்கல் நாட்டுவது ஒரு சட்டவிரோத செயலாகும். இது கடலோர பாதுகாப்பு மற்றும் கடலோர வள முகாமைத்துவச் சட்டத்தின் கீழ் மொத்த மீறலாகும் என்று அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

சுற்றுச்சூழல் அமைப்புகளை சீர்குலைப்பது மீளமுடியாத சுற்றுச்சூழல் சேதத்தை ஏற்படுத்தும் மற்றும் உள்ளூர் சமூகங்களுக்கு பேரழிவு அபாயங்களை அதிகரிக்கும் என்றும் அந்த அமைப்பு விசனம் தெரிவித்துள்ளது.

"மண்டைதீவில் இந்த திட்டத்தை உருவாக்குவது தீவின் சுற்றுச்சூழல் ஒருமைப்பாட்டை அழிப்பது மட்டுமல்லாமல், வளர்ச்சியின் பெயரில் அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புகளை புறக்கணிப்பதற்கான ஆபத்தான முன்னுதாரணத்தையும் அமைக்கும்" என்றும் அது கூறுகின்றது.

உள்நாட்டுச் சட்டத்திற்கு அப்பால், இந்தத் திட்டம், ஐ.நா. காலநிலை மாற்றம் தொடர்பான கட்டமைப்பு மாநாடு (UN-FCCC) மற்றும் பாரிஸ் ஒப்பந்தத்தின் கீழ் இலங்கையின் சர்வதேச காலநிலை கடமைகளையும் குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது என்றும் அது குறிப்பிட்டுள்ளது.

இந்த எச்சரிக்கைகளை மீறி நிர்மாண நடவடிக்கைகளை அரசு முன்னெடுத்தால் உள்நாட்டு நீதிமன்றங்களிலும், சுற்றுச் சூழல் தொடர்பான சர்வதேச ஆயங்களிலும் இந்தக் கட்டுமான நடவடிக்கைகள் சவாலுக்கு உட்படுத்தப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

---

## பொறுப்புக் கூறலுக்கு...

மூலங்களில் இருந்து கிடைக்கப்பெற்றவையும் ஆகும்.

இந்த ஆவணங்கள் அனைத்தும் மிகப்பாதுகாப்பான டிஜிட்டல் ஆதாரத் திரட்சிக் கட்டமைப்பின் ஊடாகப் பேணப்படுவதாகவும், இவற்றில் மீறல்களுக்கான பொறுப்பாளிகளுடன் தொடர்புடைய ஆவணங்கள் ஒப்பீட்டளவில் குறைவாகவே இருப்பதாகவும் இலங்கை பொறுப்புக்கூறல் செயற்றிட்டம் தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் கடந்த 2021 ஆம் ஆண்டு இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் 'இலங்கை பொறுப்புக்கூறல் செயற்றிட்டம்' எனும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்தச் செயற்றிட்டத்தின் ஓரங்கமாக இலங்கையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற மனித உரிமை மற்றும் மனிதகுலத்துக்கு எதிரான மீறல்கள் தொடர்பில் ஆதாரங்கள் சேகரிக்கப்பட்டு, உரியவாறு மதிப்பீடு செய்யப்பட்டு, சர்வதேச நியாயாதிக்கத்தின் கீழான வழக்குத் தொடரல் தேவைப்பாடுகளுக்காக உரிவாறு களஞ்சியப்படுத்தப்பட்டு வருகின்றன.


அதன்படி இலங்கை பொறுப்புக்கூறல் செயற்றிட்டத்தின்கீழ் இயங்கும் ஆதாரங்களைத் திரட்டும் செயன்முறையின் ஊடாக இலங்கையில் இடம்பெற்ற மீறல்கள் தொடர்பில் கடந்த செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி வரையான காலப் பகுதியில் ஒரு இலட்சத்து 12 ஆயிரத்து 348 ஆவணங்கள் திரட்டப்பட்டுள்ளன. இவற்றில் 78 ஆயிரத்து 151 ஆவணங்கள் இலங்கை தொடர்பான ஐ.நாவின் முன்னைய விசாரணை அறிக்கைகளில் இருந்தும், 34 ஆயிரத்து 197 ஆவணங்கள் இலங்கை பொறுப்புக்கூறல் செயற்றிட்டத்தினாலும் திரட்டப்பட்டவையாகும்.

மேற்குறிப்பிட்ட ஆவணங்களில் மீறல்கள் பற்றிய தகவல்கள், ஆதாரங்கள், சிவில் அமைப்புக்களின் அறிக்கைகள், நேர்காணல்கள், அறிக்கைகள், காணொளிகள், புகைப்படங்கள் என்பன உள்ளடங்குகின்றன.

அதேவேளை செப்டெம்பர் மாதம் வரையில் திரட்டப்பட்டுள்ள ஒரு இலட்சத்து 12 ஆயிரத்து 348 ஆவணங்களில் 7 ஆயிரத்து 459 ஆவணங்கள் திறந்த மூலங்களில் இருந்து கிடைக்கப்பெற்றவையாகவும், ஒரு இலட்சத்து 4 ஆயிரத்து 889 ஆவணங்கள் இரகசிய மூலங்களில் இருந்து கிடைக்கப்பெற்றவையாகும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. அத்தோடு இரகசிய மூலங்களில் இருந்து கிடைக்கப்பெற்ற ஒரு இலட்சத்து 4 ஆயிரத்து 889 ஆவணங்களில் 0.5 சதவீதமானவை நேர்காணல்கள் மற்றும் சாட்சியங்களின் வாக்குமூலங்களும், 1.3 சதவீதமானவை சம்பந்தப்பட்ட தரப்பினரிடமிருந்து பெற்ற தரவுகளும், 1.9 சதவீதமானவை நீதிமன்ற ஆவணங்களும், 23.2 சதவீதமானவை சம்பந்தப்பட்ட தரப்பினரிடமிருந்து பெற்ற அறிக்கைகளும், 27.6 சதவீதமானவை மின்னஞ்சல், கடிதங்கள், கூட்ட அறிக்கைகள் உள்ளிட்ட ஏனையவையும், 45.5 சதவீதமானவை பாதிக்கப்பட்ட தரப்பினரால் சமர்ப்பிக்கப்பட்டவையும் ஆகும்.

அதேபோன்று ஆதாரங்களைத் திரட்டும் செயன்முறை வசமுள்ள ஆவணங்களில் 37 ஆயிரத்து 905 ஆவணங்கள் சட்டவிரோத படுகொலைகள் தொடர்பானவையும், 48 ஆயிரத்து 70 ஆவணங்கள் வலிந்து காணாமல் ஆக்கப்படல்கள் தொடர்பானவையும், 32 ஆயிரத்து 99 ஆவணங்கள் பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான மீறல்கள் தொடர்பானவையும், 9 ஆயிரத்து 163 ஆவணங்கள் சிறுவர்களுக்கு எதிரான மிகப்பாரதூரமான மீறல்கள் தொடர்பானவையும், 26 ஆயிரத்து 185 ஆவணங்கள் சித்திரவதைகள் தொடர்பானவையும் ஆகும்.

இந்த ஆவணங்கள் அனைத்தும் மிகப்பாதுகாப்பான டிஜிட்டல் ஆதாரத் திரட்சிக் கட்டமைப்பின் ஊடாகப் பேணப்படுவதாக இலங்கை பொறுப்புக்கூறல் செயற்றிட்டம் தெரிவித்துள்ளது. அது மாத்திரமன்றி இந்த ஆவணக்களஞ்சியம் பாதிக்கப்பட்ட தரப்பினரை மையப்படுத்தியதாக அமைந்திருப்பதாகவும், மீறல்களுக்கான பொறுப்பாளிகளுடன் தொடர்புடைய ஆவணங்கள் ஒப்பீட்டளவில் குறைவாகவே இருப்பதாகவும் அந்தச் செயற்றிட்டம் சுட்டிக்காட்டியுள்ளது.



# யாழில் போதைப்பொருளுடன் இளைஞர் ஒருவர் சிக்கினார்!

யாழ்ப்பாணம் – மணியந்தோட்டம் பகுதியில் இளைஞர் ஒருவர் ஐஸ் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம்மாவட்டசிரேஷ்டபொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய, பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப் பட்டது. சந்தேகநபருக்கு எதிரான நீதிமன்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**நாடாளுமன்றத்தில்....**

மகேஷ் சேனாநாயக்க உள்ளிட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களுடன் இடம்பெற்ற கலந்துரையடல் ஒன்றின் போதே ரணில் விக்கிரமசிங்க மேற் கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்தும் தெளிவுபடுத்து கையில்,

“ஜனநாயக நாட்டுக்கு எதிர்க்கட்சியின் செயல் திறன் மிகவும் முக்கியமானது. ஆனால், எதிர்காலத்தில் கட்சி அரசியல் தோல்வியடைந்து, தனிநபர்களைச் சுற்றியே அரசியல் தீர்மானிக்கப்படும். இருப்பினும் நாடாளுமன்ற ஜனநாயகத்தில் எதிர்க்கட்சியின் செயற்பாடுகள் மிக முக்கியம் என்பதை உணர வேண்டும். ஆனால், இன்று எதிர்க்கட்சி பல வீனமாகவே உள்ளது. எதிர்க்கட்சியாகப் பரந்துபட்டுச் செயற்படாமல், சில நபர்கள் மட்டுமே எதிர்க்கட்சியாகச் செயற்படுகின்றனர். உதாரணமாக சாமர சம்பத், தயாசிறி ஜயசேகர போன்றவர்கள் உள்ளனர்.

உத்தேச பொதுக் கூட்டணியின் தலைமைத்துவத்தை ஐக்கிய மக்கள் சக்தி பெற்றுக்கொள்ள முயற்சிக்கின்றது. இதற்கு நான் இணங்கமாட்டேன் என்று கருதுகின்றனர். அவ்வாறில்லை. அவர்களின் கோரிக்கையை நான் ஏற்றுக் கொண்டால், கூட்டணியின் எதிர்காலம் குறித்து ஐக்கிய மக்கள் சக்தியின் திட்டம் என்ன என்ற கேள்வி உள்ளது.

பிளவுபட்டுள்ள ஐக்கிய தேசிய கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய இரு கட்சிகள் மட்டுமல்லாமல், அனைத்து கட்சிகளும் அரசியல் நிலப்பரப்பில் மறைந்து போகலாம். இலங்கையில் மட்டுமல்ல, முழு உலகிலும் ‘தனிநபரை சார்ந்த அரசியல் உருவாகி வருகின்றது. உலகெங்கிலும் கட்சிக் கட்டமைப்புகளை விட, தனிநபர்களின் ஆளுமை மற்றும் செல்வாக்கைச் சுற்றியே அரசியல் முடிவுகள் எடுக்கப்படும் ஒரு காலகட்டம் வரும்.” – என்றார்.

---

**சகலரினதும்....**

அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அவரின் வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

“உலகெங்கிலும் வாழும் இந்து மக்களால் மிகுந்த பக்தியுடன் கொண்டாடப்படும் தீபாவளி பண்டிகை இன்று கொண்டாடப்படுகின்றது.

கிருஷ்ண பகவான் நரகாசுரனை அழித்தமையை நினைவு கூர்ந்து, அதர்மத்தைத் தோற்கடித்து அநீதியை வென்றது போன்று அனைவரின் இதயங்களிலும் இருள் நீங்கி ஒளி பரவட்டும் என்ற பிரார்த்தனையை தாங்கி அவர்கள் மத அனுஷ்டானங்களில் ஈடுபடுகின்றனர்.

இந்தக் கொண்டாட்டம் தீமைக்கு எதிராக நன்மை வெற்றி பெற்றதை குறிக்கின்றது. தற்போது நம் முன்பாக உள்ள பெரும் சவால் போன்றே நாட்டின் முன்னேற்றத்துக்குத் தடையாக இருக்கும் போதைப்பொருள், மறைந்துள்ள குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்த அரசு பெரும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. அனைவரினதும் வாழும் உரிமையை உறுதி செய்வதும் அதை ஒரு சிறந்த மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கைக்கான உரிமையாக மேம் படுத்துவதும் எங்கள் முயற்சிகளின் முக்கிய நோக்கமாகும்.

இதேபோல், நமது பிரஜைகள் மட்டுமன்றி இந்த நாட்டில் வசிக்கும், வருகை தரும் அனைத்து மக்களின் உடல், மன, பௌதிக மற்றும் உணர்வுகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் பொறுப்புக்காக அரசு என்ற வகையில் நாங்கள் அர்ப்பணிப்புடன் இருக்கின்றோம்.

அனைத்து மதவாத, இனவாத சக்திகளையும் தோற்கடித்து சமூக நீதியை நிலைநாட்டவும் அனைவரும் தங்கள் அனைத்து சிவில் – அரசியல் – கலாசார உரிமைகளையும் தடையின்றி அனுபவிக்கக்கூடிய அனைவரின் சுதந்திரமும் கண்ணியமும் பாதுகாக்கப்படும் ஒரு பாதுகாப்பான நாட்டைக் கட்டியெழுப்பவும் நாங்கள் உறுதி பூண்டுள்ளோம் என்பதை இதன் மூலம் வலியுறுத்துகின்றேன்.

தீபாவளி உண்மையிலேயே ஓர் ஒளிப் பண்டிகை. தீபாவளியன்று ஒவ்வொரு வீட்டையும் ஒளிரச் செய்யும் விளக்குகளுடன் ‘வளமான நாடு – அழகான வாழ்க்கை’ தொடர்பிலான இந்த நாட்டு மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்ற நமது ஒன்றிணைந்து செல்லும் பாதை இன்னும் ஒற்றுமையாக இருக்கட்டும் என்று பிரார்த்தித்து இலங்கையிலும் உலகெங்கிலும் வாழும் அனைத்து இந்து பக்தர்களுக்கும் அவர்களின் இதயங்களைப் பிரகாசமாக்கும் மகிழ்ச்சிகரமான தீபாவளி நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.” – என்றுள்ளது.



# 06 கிலோ போதைப்பொருளுடன் 28 வயதுடைய இளைஞன் கைது

காலி, அகுரல பகுதியில் 06 கிலோ 325 கிராம் போதைப்பொருளுடன் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ரத்கம விசேட அதிரடிப்படையினர் நேற்று முன்னெடுதத சுற்றிவளைப்பின் போது மேற்படி சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

கஹவ தூவபார பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

# போதைப்பொருள் தொடர்பில்லாதவர்கள் மட்டுமே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளர்கள்

## நாமல் ராஜபக்ஷ திட்டவட்டம்



கட்சியின் வேட்பாளர்கள் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் அல்லது போதைப் பொருள் கடத்தல்காரர்களுடன் எந்த தொடர்பும் இல்லை என்பதை உறுதிப்படுத்த, கட்டாயமாக பொலிஸ் அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் இளைஞர் குழுவின் கூட்டத்தில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தமது கட்சியில் பலதரப்பட்ட மக்கள் உள்ளனர். ஆனால், முக்கியமானது என்னவென்றால், ஒரு புதிய இளைஞர் குழு எங்களைச் சுற்றி அணிதிரண்டு, பொதுவான தூரநோக்கு மற்றும் கொள்கையைப் பகிர்ந்து கொள்கிறது. இந்த இளம் உறுப்பினர்களுக்கு எங்கள் கட்சிக்குள் ஒரு பெரிய வாய்ப்பு உள்ளது.

மாகாண சபை தேர்தல்கள் விரைவில் நடைபெறும் என்று நான் நம்புகிறேன். ஒரு கட்சியாக, இந்தத் தேர்தல்களில் போட்டியிடுவது மற்றும் வேட்புமனுக்களை வழங்குவது குறித்து நாங்கள் முடிவுகளை எடுக்க வேண்டும். இந்த முறை, வேட்பாளர்கள் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் அல்லது போதைப் பொருள் நடவடிக்கைகளுடன் எந்த தொடர்பும் இல்லை என்பதை உறுதிப்படுத்தக் கட்டாயமாக ஒரு பொலிஸ் அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும்.” என்று தெரிவித்தார்.

# மலையக ரயில் சேவை மட்டுப்படுத்தப்பட்டது

மலையக மார்க்கத்திலான ரயில் போக்குவரத்து ரம்புக்கனை வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

கண்டியிலிருந்து கொழும்பு – கோட்டை நோக்கி பயணித்த ரயில் இஹல கோட்டே ரயில் நிலையத்திற்கு அருகில் தடம் புரண்டதன் காரணமாக ரயில் போக்குவரத்து நேற்று மட்டுப்படுத்தப்பட்டது.

ரயிலை தண்டவாளத்தில் மீள நிறுத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.


**தென்னங்காணி விற்பனைக்கு**

கொடிகாமம் – பருத்தித்துறை வீதியில்19 பரப்புக் காணி விற்பனைக் குண்டு.
வீடு கட்டுவதற்கு உகந்த இடம்.
விலை பேசித் தீர்மானிக்கலாம்.
**தொடர்புகளுக்கு:077 327 6500**



# பல நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறப்பு

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலையால், தொடர்ந்து பெய்து வரும் கனமழை காரணமாக, பல நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் நேற்று திறக்கப்பட்டுள்ளன.

பொல்கொல்ல மகாவலி நீர்த்தேக்கத்தின் 04 வான் கதவுகளைத் திறக்க பொல்கொல்ல மகாவலி நீர்த்தேக்கப் பொறியாளர் அலுவலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

விக்டோரியா நீர்த்தேக்கத்தில் வினாடிக்கு 5,190 கன அடி நீர் திறந்து விடப்படுவதாகக் கூறப்படுகிறது.

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுகளில் பெய்து வரும் கனமழையால் ஏற்படக்கூடிய வெள்ள நிலைமையைக் கட்டுப்படுத்த நேற்று 04 வான்வழிகள் திறக்கப்பட்டன என அலுவலகம் மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, கலா வாவியின் இரண்டு வான் கதவுகளும் தலா இரண்டு அடி உயர்த்தப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி, கலா வாவியிலிருந்து கலா ஓயாவிற்கு வினாடிக்கு 3,447 கன அடி நீர் திறக்கப்படும் என்று நீர்ப்பாசனப் பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

தம்புலு ஓயா உள்ளிட்ட மேல் நீர்ப் பிடிப்புப் பகுதிகளிலிருந்து கலா வாவி நீர்த்தேக்கத்திற்கு மணிக்கு 4,545 அடி நீர் கொள்ளளவு கிடைப்பதாக கலா வாவி மற்றும் போவதென்ன நீர்த்தேக்கங்களுக்குப் பொறுப்பான நீர்ப்பாசனப் பொறியியலாளர் புத்திக நவரட்ன தெரிவித்துள்ளார்.

ராஜாங்கனை நீர்த்தேக்கத்திலும் ஆறு வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

கலா ஓயாவில் வினாடிக்கு 4,990 கன அடி நீர் திறந்து விடப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அங்கமுவ நீர்த்தேக்கத்தின் இரண்டு வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

அதிலிருந்து வினாடிக்கு 2,824 கன அடி நீர் கலா ஓயாவிற்கு வெளியேற்றப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# ஆலயத்திற்கு சென்றிருந்த வயோதிபர் சடலமாக மீட்பு

யாழ். அராலி மத்தி வட்டுக்கோட்டை பகுதியில் உள்ள வீரபத்திரர் ஆலயத்திற்கு சென்ற வயோதிபர் ஒருவர் அங்கு உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் அதே இடத்தைச் சேர்ந்த முருகேசு கணேசலிங்கம் (வயது 81) என்ற வயோதிபர் ஆவார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஆலயத்திற்கு சென்றவர் வீடு திரும்பாமையால் தேடிச் சென்ற போது அவர் ஆலயத்தில் சடலமாக காணப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்திற்கு சென்ற யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆறுமுகம் ஜெயபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டுள்ளார்.

சாட்சிகளை வட்டுக்கோட்டை பொலிஸார் நெறிப்படுத்தினர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தீபாவளி எப்போது?

இன்று தீபாவளித் திருநாள்.

'தீபம்' என்றால் 'விளக்கு' என்றும், 'ஆவளி' என்றால் 'வரிசை' என்றும் பொருள். விளக்குகளை வரிசையாக அடுக்கி வைத்து வழிபடும் நாளே தீபாவளி எனப்படும். வாழ்வில் இருள் எனும் தீமை நீங்கி, நன்மை எனும் ஒளியைப் பரவச் செய்யும் தினமாகவே தீபாவளி கொண்டாடப்படுகிறது. அன்பும் ஞானமும் பிறக்கும் ஒளி பிரகாசிக்கும் திருவிழாவே இது.

தீமையின் மீது நன்மையின் வெற்றி; இருளின் மீது ஒளியின் வெற்றி; அறியாமையின் மீது மெய்யறிவின் வெற்றி என்பதைக் கொண்டாடும் ஒளிப் பண்டிகை தீபாவளி ஆகும்.

தீபாவளி பண்டிகை கொண்டாட பல புராணக் கதைகள் கூறப்படுகின்றன. ராமாயணத்தில் 14 ஆண்டுகள் வனவாசம் சென்றிருந்த ராமன், ராவணனை அழித்துவிட்டு வனவாசம் முடிந்து, மனைவி சீதாதேவி, தம்பி லட்சுமணனுடன் அயோத்தி திரும்பினார். ராமன் திரும்பி வருவதை வரவேற்கும் வகையில் அயோத்தி மக்கள் விளக்கேற்றி கொண்டாடி மகிழ்ந்தனர். அந்த நாள்தான் தீபாவளி என்று கொண்டாடப்படுவதாக சிலர் கூறுகிறார்கள்.

சத்யபாமா நரகாசுரனை அழிப்பதையும் இந்தக் கதைகள் குறிக்கின்றன. இந்த நாளில் அரக்கன் நரகாசுரன் கொல்லப்பட்டான்.

பட்டாசுகள் வெடித்து பூஜை செய்து, விளக்கு ஏற்றி தீபாவளி கொண்டாடப்படுகிறது. விளக்குகள் மூலமாக இந்த உலகின் அழகு தெரிய வந்து அனுபவிக்க முடிகிறது. விளக்குகள் வீடுகளை அலங்கரிக்க மட்டுமல்ல, வாழ்க்கை பற்றிய ஓர் ஆழமான உண்மையை தொடர்பு கொள்ளவும் ஏற்றப்படுகின்றன. இருள் ஞானத்தின் ஒளியால் அகற்றப்படும் போது தீமையை நன்மை வெற்றி கொள்கிறது. ஏற்றப்பட்டிருக்கும் விளக்கு, இருள் மற்றும் பேராசை, காமம், பயம், வன்முறை, அநீதி, பொல்லாப்பு போன்ற எதிர்மறை சக்திகள் அறிவினால் அழிக்கப்படுவதைக் குறிக்கிறது.

ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை தீபாவளி கொண்டாடும் திருநாள் இன்னும் அவர்களுக்கு வரவில்லை என்றுதான் கூற வேண்டும்.

அவர்களின் வாழ்வில் இன்னும் இருள் சூழ்ந்திருக்கின்றது. ஒளி ஏற்றப்படவில்லை. அடிமை நிலையும் அவல வாழ்வும் அவர்களுக்கு தொடர்கதையாக நீடிக்கின்றன.

அவர்களைப் பேரவலத்துக்குள் ஆழ்த்தி, பேரிழப்புக்களை ஏற்படுத்தி வரும் பேரினவாத நரகாசுரன் அழிக்கப்படவில்லை. அவன் இன்னமும் தன் கோரக் கொடூர முகத்தை தமிழர் தேசம் மீது காட்டி நம்மினத்தைச் சின்னாபின்னப்படுத்திக் கொண்டுதானிருக்கின்றான்.

அந்தப் பேரவலத்துக்கு முடிவு கட்டப்பட்டு, இழைக்கப்பட்ட நீதிகளுக்கு நீதி கிட்டும் நாள்தான் தமிழர்களுக்கு உண்மையான தீபாவளித் திருநாளாக இருக்க முடியும். அன்றைய நாள்தான் அவர்கள் வாழ்வில் ஒளி வீசும். அடிமைத்தளை அகலும் அந்த நாளுக்காக தமிழினம் காத்திருக்கின்றது.



# வெளிவிவகார அமைச்சர் விஜித சவூதிக்கு விஜயம்

உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் எதிர்வரும் 6 ஆம் திகதி வியாழக்கிழமை சவூதி அரேபியாவுக்கு செல்ல உள்ளார்.

ரியாத் நகரில் நடைபெறவுள்ள நான்காவது அழகியல் மற்றும் மருத்துவ அறிவியல் அகாடமி மாநாடு மற்றும் கண்காட்சியில் கலந்து கொள்வதற்காகவே இந்த விஜயம் முன்னெடுக்கப்படுகின்றது.

அமைச்சர் விஜித ஹேரத், இந்த சர்வதேச மாநாட்டில் பங்கேற்பதுடன், சவூதி அரேபிய அரசாங்கத்தின் முக்கிய தலைவர்களையும், அதிகாரிகளையும் சந்திக்க உள்ளார். இந்தச் சந்திப்புகள் மூலம், இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது, புதிய வர்த்தக மற்றும் முதலீட்டு வாய்ப்புகளை ஆராய்வது, அத்துடன் சவூதி அரேபியாவில் பணிபுரியும் 5 லட்சத்திற்கும் அதிகமான இலங்கை தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாப்பது குறித்தும் கலந்துரையாட எதிர்பார்த்துள்ளார்.

# எரிபொருளுக்கான கொடுப்பனவை நிராகரிக்க அமைச்சர்கள் தீர்மானம்

## பிரதியமைச்சர் நாமல் கருணாரத்ன தகவல்



நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான வரப்பிரசாதங்களின் கீழ் வழங்கப்படும் எரிபொருள் கொடுப்பனவை நிராகரிப்பதற்கு அமைச்சர்கள் மற்றும் பிரதியமைச்சர்கள் தீர்மானித்துள்ளனர்.

தற்போதுள்ள முறைமைக்கு அமைய, அமைச்சர் அல்லது பிரதியமைச்சருக்கு அமைச்சின் வரப்பிரசாதங்களின் கீழ் எரிபொருள் மற்றும் சம்பளம் என்பன வழங்கப்பட வேண்டும்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுகளின் கீழ் எரிபொருள் மற்றும் சம்பளம் ஆகியன கிடைக்க வேண்டும் என்பதும் சட்டத்திற்குட்பட்டதாகும்.

அந்தவகையில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான கொடுப்பனவின் கீழ் மாதாந்த சம்பளத்தை மாத்திரம் பெற்றுக்கொள்ள தீர்மானித்துள்ளதாக விவசாய பிரதியமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

அமைச்சர்களுக்கான கொடுப்பனவின் கீழ் எரிபொருள் கொடுப்பனவை மாத்திரம் பெற்றுக்கொள்வதற்கும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தீபாவளித் திருநாள் சிறப்புடை நாளே!



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா,
மேனாள் தமிழ்மொழிக் கல்வி
இயக்குநர்,
மெல்பேர்ன், ஆஸ்திரேலியா.

தீயவை அகன்றால் நல்லவை மலரும்
தீபா வளியின் தத்துவம் ஆகும்
ஆணவ அரக்கன் அழிந்த நன்னாளே
ஆனந்தத் தீபா வளியாய் ஆனது...

அதிகாலை அனைவரும் எழுந்துமே விடுவார்
அக மகிழ்வுடனே நீராடி மகிழ்வார்
புத்தாடை அணிந்து புத்துணர் வடைவார்
அத்தனை மகிழ்ச்சியும் வந்ததாய் நினைப்பார்

தீபா வளியில் தித்திப்பு நிறையும்
திரும்பிய திசையெலாம் மத்தாப்புச் சிதறும்
பட்டாசு சத்தம் பரவியே நிற்கும்
குடும்பங்கள் எல்லாம் குதூகலம் கொள்ளும்

தீபாவளித் திருநாள் சிறப்புடை நாளே
இருப்பாரும் மகிழ்வர் இல்லாரும் மகிழ்வர்
அவரவர் ஆனந்தம் அவரவர்க்கு உரியதே
அகமகிழ் வுறுவுதே அனைவர்க்கும் பொதுவே

பட்டி மன்றம் பாங்காய் நடக்கும்
பற்பல இடங்களில் இசையும் ஒலிக்கும்
நாட்டியம் இருக்கும் நல்லுரை இருக்கும்
முத்தமிழ் யாவும் முத்தாய் ஒளிரும்

ஆலயம் அனைத்தும் தீபத்தில் ஒளிரும்
அனைவரும் ஆலயம் நோக்கியே செல்வர்
அகத்தினில் இருக்கும் அனைத்தையும் கேட்பார்
அமைதியாய் ஆண்டவன் அடியினைப் பரவுவார்

அம்மா அப்பா உறவுகள் சேர்ந்து
ஆலயம் சென்றால் ஆனந்தம் பெருகும்
அன்பும் அறமும் அகத்தில் அமர்ந்திட
வேண்டியே நிற்பது நல் வரமாகும்

தீபா வளியில் தீமைகள் அகன்றிட
யாவரும் இறையை வேண்டியே நிற்போம்
கோபங்கள் தவிர்ப்போம் குணைத்தை இருத்துவோம்
குவலயம் நலமுற வேண்டுவோம் இறையை...!

# தீபாவளி - மனத்தின் வெளிச்சம்!

இருள் நீக்கும் ஒளிவிழா,
இயற்கையோடு இணையும் நெறி – தீபாவளி
வெறும் பட்டாசு அல்ல இது,
மனத்தின் மாசை கழிக்கும் ஒரு உளவியல் தருணம்!

பகை மனம் அழியும் நேரம்,
பாசம் பொங்கும் சமூக நேரம்
மன அழுத்தம் கரையும் தருணம்,
சிரிப்பு மலரும் ஒவ்வொரு வீடும்!

நம் சிந்தனை ஒரு தீபம்,
அதை ஏற்றினால் இருள் ஒழியும்.
உளவியலில் “ழளவைளைந டுபைாவ” எனும்
அர்த்தம் இங்கே பூரணமாய் விளங்கும்

சிறு தீபம் ஒரு உள் மாற்றம்,
நம்பிக்கையின் நரம்பை தூண்டும் ஆற்றல்.
அந்த ஒளியில் காண்கிறோம் நாமே
மறந்துபோன நம் மன அமைதியை!

சமூக உளவியல் சொல்கிறது
“ஒன்றிணைவு மன அழுத்தத்தை குறைக்கும்” என்று,
அதேபோல் தீபாவளி
உறவுகளை இணைக்கும் சின்னம் ஆகும்.

பட்டாசு ஒலி அதிகம் என நினைக்க,
அதன் பின்னால் இருக்கும் மகிழ்ச்சி உணர்ந்தால்,
அந்த “ளழரனெ நநெசபல” கூட
மனதில் ஆற்றலாய் மாறும்!

மனம் – இருளில் வழி தவறினால்,
அறிவு – தீபமாக ஆகட்டும்.
தீபாவளி நமக்கு சொல்லும் பாடம்
ஒளி வெளிப்பட மனமே மாறட்டும்!

பொய்மையை எரிக்கும் அக்னி இது,
உண்மையை ஏற்றும் தீபம் இது!
பொருளில் அல்ல, பொருட்பொருளில் அல்ல
மனத்தில் வெளிச்சம் தேடும் விழா ,இது!

அன்பு, சமாதானம், சமூக ஒற்றுமை
இவைதான் தீபாவளியின் உண்மை விளக்குகள்
உளவியலின் மொழியில் சொல்லலாம்
இது “நுஅழவழையெட ஊடநயளெைபை” விழா!

நாம் ஒளி ஏற்றும் ஒவ்வொரு தருணமும்,
அது வெறும் தீபம் அல்ல, ஒரு தீர்வு –
மன இருளிலிருந்து வெளிச்சத்துக்குச் செல்லும்
உளவியல் பயணம் – தீபாவளிள



நடராசா கோபிராம்,
(உளவியல்
சிறப்புக்கலை மாணவன்,
யா. பல்கலைக்கழகம்)



# வெளிச்சத்தின் உளவியல்
# சமூகம் மற்றும் உலகளாவிய ஒளி!

தீபாவளி என்பது ஒளியின் திருவிழா மட்டுமல்ல அது மனித மனதின் ஆழ்ந்த உளவியல் அனுபவமாகவும், சமூக ஒற்றுமையின் சின்னமாகவும், ஆன்மீக விழிப்புணர்வின் விளக்காகவும் திகழ்கிறது. இந்தியாவிலும் இலங்கையிலும் மட்டுமின்றி உலகம் முழுவதும் வாழும் இந்துக்கள், ஜைனர்கள், சீக்குகள் மற்றும் பல்வேறு சமுதாயங்கள் இதனை மகிழ்வுடன் கொண்டாடுகின்றனர். தீபாவளி என்பது இருளை வென்ற வெளிச்சம், தீமையை வென்ற நன்மை, துயரத்தை வென்ற நம்பிக்கை என்ற மனித உள்ளத்தின் அடிப்படை போராட்டத்தை பிரதிபலிக்கும் திருநாளாகும். உளவியலின் (Psychology) கோணத்தில் பார்த்தால், தீபாவளி ஒரு சமூக சிகிச்சையாகவும், மன அமைதியை ஏற்படுத்தும் ஆழ்ந்த உளவியல் நிகழ்வாகவும் பார்க்கப்படுகிறது.

### தீபாவளி விழாவின் பின்னணி புராணம்

கிருஸ்ண பரமாத்மா நரகாசுரனை வதம் செய்த நாளை அடிப்படையாகக் கொண்டது. அதன் அடையாளமாக மக்கள் வீடுகள் முழுவதும் தீபங்கள் ஏற்றினர் அந்த வெளிச்சம் இன்று வரை மனித மனத்தின் உள் இருளை ஒளியாக்கும் சின்னமாக திகழ்கிறது. உளவியலின் அடிப்படையில், இது "கதாசிஸ் அனுபவம்" எனப்படும் – அதாவது மனத்தில் அடங்கிய துயரங்கள், பயங்கள், இருள்கள் எல்லாம் ஒரு வெளிப்படையான ஆனந்த அனுபவத்தின் மூலம் வெளியேறி மனம் புது வெளிச்சத்தை அடைகிறது. இதுவே தீபாவளி விழாவின் உளவியல் வலிமை.

மனித மனம் வெளிச்சத்தையும், சுத்தத்தையும் சின்னங்களாக எடுத்துக்கொள்கிறது.தீபாவளி காலத்தில் மக்கள் வீடுகளை சுத்தம் செய்வது, புதிய உடைகள் அணிவது, எண்ணெய் குளியல் செய்வது போன்ற பழக்கவழக்கங்கள் அனைத்தும் உடல் மட்டுமல்ல, மனதையும் சுத்திகரிக்க உதவுகின்றன. Psychologyயின் "Symbolic Cleansing" என்ற கோட்பாடு இங்கு பொருந்துகிறது – வெளிப்புற சுத்தம் உள் மனதின் சுத்தத்தையும் ஊக்குவிக்கிறது. பழைய பொருட்களை அகற்றுவது, புதிய ஆடை அணிவது, தீபங்களை ஏற்றுவது ஆகியவை மனதில் புதிய தொடக்கத்தின் உணர்வை உருவாக்குகின்றன. இது "Cognitive Renewal" எனப்படும் உளவியல் நிம்மதி நிலையை ஏற்படுத்துகிறது.

தீபாவளி விழா சமூக ரீதியிலும் ஆழ்ந்த தாக்கம் கொண்டது. இலங்கையில் உள்ள தமிழர்கள், இந்தியர்கள், மேலும் பல்வேறு மதத்தினரும் இதனை சமூக ஒற்றுமையுடன் கொண்டாடுகின்றனர். நகரங்களிலும் கிராமங்களிலும் அனைவரும் ஒன்றாக சேர்ந்து வீடுகளையும் தெருக்களையும் அலங்கரிப்பது, இனிப்பு பகிர்வது, குழந்தைகள் பட்டாசு வெடிப்பது போன்றவை சமூக உறவுகளை வலுப்படுத்தும் நிகழ்வுகளாகும். இது "Social Cohesion" என்ற உளவியல் நிகழ்வை உருவாக்குகிறது. அதாவது மனிதர்கள் ஒரே சமூகத்தில் தங்களின் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளும் ஒரு நிலை. தீபாவளி இதனால் மக்களிடையே கருணை, பகிர்வு, ஒற்றுமை போன்ற நல்லுணர்வுகளை வளர்க்கிறது.

உலகளாவிய ரீதியில், தீபாவளி இன்று ஒரு multicultural celebration ஆக மாறியுள்ளது. இந்தியா, இலங்கை, நேபாளம், சிங்கப்பூர், மலேசியா, மொரீசியஸ், தென் ஆப்பிரிக்கா, யுகே, அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில் வாழும் இந்திய வம்சாவளியினர் இதனை பெரும் மகிழ்ச்சியுடன் கொண்டாடுகின்றனர். இது உலகளாவிய மனித சமூகம் மதங்களின் வேறுபாட்டை மீறி கலாச்சார ஒருமைப்பாட்டை ஏற்கும் திறனை வெளிப்படுத்துகிறது. தீபாவளி United Nations u;eadquarters; கூட ஆண்டுதோறும் கொண்டாடப்படும் ஒரு global cultural event ஆகி விட்டது. இதன் மூலம் உலகமெங்கும் "Peace, Prosperity and Light" என்ற மனித நேயத்தின் மூன்று முக்கிய அடையாளங்கள் பரவுகின்றன.

மத ரீதியாக, தீபாவளி ஒவ்வொருவருக்கும் தனித்துவமான ஆன்மீக அர்த்தத்தை தருகிறது. இந்துக்கள் லட்சுமி பூஜையால் செல்வம், அறிவு, வளம் ஆகியவற்றை வேண்டுகின்றனர். ஜைனர்கள் மகாவீரரின் முக்தி நாளாகக் கொண்டாடுகின்றனர். சீக்குகள், குரு ஹர்கோபிந்த் சாஹிபின் சிறைவிடுதலை நினைவு நாளாகக் கொண்டாடுகின்றனர். ,ந்த அனைத்து வழிபாடுகளும் மனித மனத்தின் spiritual elevation – ஆன்மீக உயர்வு – நோக்கி செல்லும் ஒரு சின்னமாகும். உளவியலின் "Transpersonal Psychology" கோணத்தில், இது மனிதன் தன்னைவிட பெரிய சக்தியோடு இணையும் நிலையைச் சுட்டுகிறது. அதாவது தீபாவளி என்பது கடவுளோடு, ஒளியோடு, நன்மையோடு மனிதன் ஒன்றாகும் ஆன்மீக அனுபவம்.

தீபாவளி சமூகச் சூழலில் சிரிப்பு, மகிழ்ச்சி, உறவுகள், இசை, ஒளி ஆகியவற்றின் கலவையாகும். இவை அனைத்தும் மனிதனின் "Positive Emo-

# வெளிச்சத்தின் உளவியல்

## சமூகம் மற்றும் உலகளாவிய ஒளி!

tions”ஐ அதிகரிக்கின்றன. உளவியலாளர் Martin Seligman $wpa “Positive Psychology” கோட்பாட்டில், மகிழ்ச்சி மற்றும் நன்றியுணர்வு உணர்வுகள் மன அழுத்தத்தைக் குறைத்து வாழ்க்கை திருப்தியை அதிகரிக்கின்றன. தீபாவளியில் மக்கள் தங்கள் குடும்பத்தினருடனும் நண்பர்களுடனும் சேர்ந்து இனிப்பு பகிர்வதும், நல்வாழ்த்துக்கள் தெரிவிப்பதும், புதிய தொடக்கத்தை கொண்டாடுவதும் இதையே பிரதிபலிக்கின்றன. இது “Emotional Resilience” எனப்படும் மன வலிமையை வளர்க்க உதவுகிறது. அதாவது துன்பங்களையும் தோல்விகளையும் தாண்டி மனதின் ஒளியைத் தக்க வைத்துக் கொள்ளும் ஆற்றல்.

இலங்கையில், குறிப்பாக தமிழ் சமூகங்களில், தீபாவளி மனிதர்களின் வாழ்வில் நம்பிக்கை மற்றும் ஆனந்தத்தின் விழாவாகக் கொண்டாடப்படுகிறது. யாழ்ப்பாணம், திருகோணமலை, கொழும்பு, மன்னார் போன்ற இடங்களில் வீடுகள் ஒளியால் மிளிரும். பள்ளிகள், கோயில்கள், சமூக மையங்கள் அனைத்திலும் சிறப்பு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. இது மத விழாவைத் தாண்டி சமூக ஒற்றுமையை உருவாக்கும் national harmony பங்கு வகிக்கிறது. ஒளி என்பது வெளிப்புற சக்தியல்ல அது உள்ளார்ந்த உணர்வின் சின்னம். நம் மனத்தில் இருக்கும் இருள் – துக்கம், பயம், பொறாமை, வெறுப்பு – இவற்றை வென்று வெளிச்சத்தின் வழியாக நம்பிக்கை, மகிழ்ச்சி, கருணை, பகிர்வு ஆகியவற்றை வளர்க்கும் விழா தீபாவளி. இதனால் இது “Festival of Inner Transformation” என அழைக்கப்படுகிறது.

உலகளாவிய அளவில், தீபாவளி இப்போது cross-cultural psychologyapy;; ஒரு முக்கியமான சின்னமாகப் பேசப்படுகிறது. மேற்கத்திய நாடுகளில் இதனை “Festival of Light and Mental Wellness” எனக் குறிப்பிடுகின்றனர், ஏனெனில் இது மனநலத்தின் அடிப்படை கூறுகளை positivity, gratitude, for-giveness> hope ஆகியவற்றை வெளிப்படுத்துகிறது. பல பள்ளிகளிலும், நிறுவனங்களிலும், சமூக அமைப்புகளிலும் தீபாவளி “well-being event” ஆக கொண்டாடப்படுவது, மதம் மற்றும் கலாச்சாரம் மன நலத்தை வளர்க்கும் ஒரு தளமாக மாறியிருப்பதற்கான சிறந்த எடுத்துக்காட்டு.

முடிவாகச் சொல்லப் போனால், தீபாவளி என்பது



festival ஆக மாறியுள்ளது. பல்வேறு மதத்தினரும் இதனை ஒருங்கிணைந்த மனப்பாங்குடன் கொண்டாடுவது இலங்கையின் பல்சமய பண்பாட்டு அழகை வெளிப்படுத்துகிறது.

சுற்றுச்சூழல் மற்றும் நவீன மனநிலை கோணத்தில், தீபாவளி இன்று ஒரு புதிய வடிவத்தை எடுக்கிறது. பட்டாசு வெடிப்பால் ஏற்படும் ஒலி மற்றும் காற்று மாசு பற்றிய விழிப்புணர்வு அதிகரித்து வருகிறது. இதனால் பலர் “Eco-friendly Diwali” எனும் பசுமை தீபாவளியை ஆதரிக்கின்றனர். இது மனவியலில் “Environmental Consciousness” எனப்படும் புதிய விழிப்புணர்வை உருவாக்குகிறது. அதாவது நம் மகிழ்ச்சியும் இயற்கையின் நலனும் ஒன்றாக இணைந்திருக்க வேண்டும் என்ற உணர்வு. இது உலகளாவிய சிந்தனையின் ஒரு புதிய பரிமாணம்.

மனித மனத்தின் வளர்ச்சியில் தீபாவளி ஒரு ஆழ்ந்த வெளிச்சத்தின் திருநாளாக மட்டுமின்றி, மனித மனத்தின் உளவியல் வெளிச்சத்தையும் பிரதிபலிக்கும் விழாவாகும். இது நம் வாழ்க்கையில் துயரங்களை ஒழித்து நம்பிக்கையையும் ஆனந்தத்தையும் வளர்க்கும் உளவியல் சிகிச்சையாகும் சமூகத்தில் ஒற்றுமை, பகிர்வு, மகிழ்ச்சி ஆகியவற்றை வளர்க்கும் சமூகப் புரட்சியாகும் மதத்திலும் ஆன்மீகத்திலும் வெளிச்சத்தை நோக்கிய ஒரு ஆன்மீகப் பயணமாகும். இலங்கையிலும் உலகளாவிய ரீதியிலும் தீபாவளி இன்று Peace, Light and u;umanity எனும் மனிதனின் மூன்று நிரந்தர அடையாளங்களை ஒருங்கே கொண்டாடும் விழாவாகத் திகழ்கிறது.

**நடராசா கோபிராம்,**
**உளவியல் சிறப்புக்கலை மாணவன்,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**



# அகத்தில் ஒளி ஏற்றும் தீபாவளி!

'தீபம்' என்றால் ஒளி, விளக்கு. 'ஆவளி' என்றால் வரிசை. வரிசையாய் விளக்கேற்றி, இருள் நீக்கி, ஒளிதரும் பண்டிகையே தீபாவளி ஆகும். தீபத்தில் பரமாத்மாவும், நெருப்பில் ஜீவாத்மாவும் வாசம் செய்து அருள் தருவதாய் ஐதீகம்.

தீபாவளி பண்டிகை இந்த ஆண்டு இன்று கொண்டாடப்படுகிறது.

உலகில் இந்துக்கள் சீக்கியர்கள் வைணவர்கள் பௌத்தர்கள் என பல தரப்பினரும் இந்தியாவில் மட்டுமல்லாமல் சிங்கப்பூர், மலேஷியா வங்காள தேசம், இலங்கை போன்ற அண்டை நாடுகளிலும் தீபாவளியை வெளிச்ச நாளாக கொண்டாடுகின்றனர்.

தீபாவளி தொடர்பாக எத்தனை கதைகள் இருந்தாலும் பரவலாக பேசப்படுவது நரகாசுரனின் கதைதான்.

இது பலருக்கும் தெரிந்த கதையாக உள்ளது. பூமாதேவிக்கும் விஷ்ணு பகவானுக்கும் பகுமன் என்ற மகன் பிறக்கிறான். அவர் பல துர்குணங்களை பெற்றிருக்கிறான். அதனால் நரக அசுரன் என்று கூறப்பட்டு நாளடைவில் நரகாசுரன் என்று அழைக்கப்படுகிறான். அவன் வளர்ந்த பிறகு தேவர்களையும் தேவலோக பெண்களையும் மிகவும் துன்புறுத்துகின்றான். அது மட்டுமல்லாமல் பிரம்மாவிடம் தன் தாய் கையால் மட்டுமே தான் இறக்க வேண்டும் என்ற வரத்தையும் பெற்று விடுகிறான்.

இதனை அறிந்த மகாவிஷ்ணு ஸ்ரீ கிருஷ்ணர் அவதாரம் எடுத்து நரகாசுரனுடன் போரிடுகிறான். அப்போது நரகாசுரன் கிருஷ்ணனின் மீது அம்பை எய்துகிறார். இதனால் கிருஷ்ணர் மயக்கம் அடைவது போல் கீழே விழுகின்றார். இதை பார்த்த பூமாதேவி கோபமுற்று சத்தியபாமா என்ற அவதாரம் எடுத்து நரகாசுரனுடன் போரிட்டு அவனை அம்பால் எய்ததால் பலியாகிறான் .

அப்போதுதான் அவள் தன் தாய் என உணர்கிறான். இறக்கும் தருவாயில் ஒரு வரம் கேட்கிறார்.. என் பிடியில் இருந்து விடுபட்ட தேவர்களும் மக்களும் நான் இறந்த நாளை மகிழ்ச்சியாக கொண்டாட வேண்டும் என கேட்கிறார். அதற்கு கிருஷ்ணரும் அந்த வரத்தை கொடுக்கிறார். இந்த வரலாற்று கதைகள் அனைத்தும் நடந்த இடம் வடநாட்டில் தான் .

கி.பி. 15ஆம் நூற்றாண்டில் விஜய நகர பேரரசின் காலத்தில் இருந்துதான் தமிழ்நாட்டில் தீபாவளி பண்டிகை கொண்டாடப்படுவதாக முனிவர் தோ பரமசிவன் அவர்கள் கூறுகிறார் .

வட இந்தியாவில் தீபாவளிப் பண்டிகை குறித்துப் பல்வேறு கதைகள் சொல்லப்படுகின்றன. அதில் ஒன்று, ராமரோடு தொடர்புடையது. அதாவது ராமர் தனது 14 வருட வனவாசத்தை முடித்துக் கொண்டு, லட்சுமணன், சீதாவுடன் அயோத்திக்கு திரும்பிய தினத்தை அந்நாட்டு மக்கள் விளக்கேற்றிக் கொண்டாடினர். அதுவே தீபாவளி தினம் என்ற ஒரு கதை வழக்கில் இருக்கிறது.

மற்றொரு புராண கதையும் உள்ளது, ஸ்கந்த புராணத்தின் படி பார்வதி தேவியின் 21 நாள் கேதார கௌரி விரதம் முடிவடைந்த பிறகு சிவன் பார்வதியை தன்னுள் பாதியாக ஏற்று அர்த்தநாரீஸ்வரர் உருவம் எடுத்த நாளாக கூறப்படுகிறது. இதனை நினைவுபடுத்துவதாகவும் தீபாவளி பண்டிகை கொண்டாடப்படுகிறது. மகாபாரதத்தில் வாயிலாக ஒரு புராண கதையும் கூறப்படுகிறது . மகாபாரதத்தில் சூதாட்டத்தில் தோற்ற பாண்டவர்கள் வனவாசம் அனுப்பப்பட்டனர் .அதன் பின் அவர்கள் போரிட்டு வெற்றி பெற்று நகரம் திரும்பிய போது நாட்டின் மக்கள் அவர்களை வரவேற்கும் விதமாக தீபம் ஏற்றி கொண்டாடியதாகவும் கூறப்படுகிறது.

சமண மதத்தின் படி பீகார் மாநிலத்தில் கி.மு 599 இல் பிறந்தவ தான் மகாவீரர். இவர் பிறந்த நாள் மகாவீரர் ஜெயந்தியாக கொண்டாடப்படுவதைப் போல் முக்தி அடைந்த நாளை தீபாவளி பண்டிகையாக கொண்டாடப்படுகிறது.

மாமன்னர் அசோகர் புத்த மதத்தை தழுவிய நாள் தீபாவளி ஆக சொல்லப்படுகிறது. அதனை நினைவு கூறும் விதமாக புத்த மதத்தினரும் தீபாவளியை கொண்டாடுகின்றனர்.

அத்தகைய சிறப்பு பெற்ற தீபாவளி தினத்தில் அனைத்து மக்களின் வாழ்வில் ஒளி ஏற்றம் பெற பிரார்த்திக்கின்றோம்.

**வித்தகர் விபுலமாமணி**
**வி.ரி.சகாதேவராஜா,**
**காரைதீவு**

# பண்டிகைகாலத்து சமூகமாற்றம்!



செ.அனுத்திரா,
ஊடக கற்கைகள் துறை,
யாழ. பல்கலைக்கழகம்.

" வந்தாரை வாழவைக்கும் தமிழர் பண்பாட்டை" குறிக்கும் பண்டிகை என்பது வெறுமனே கொண் டாட்டம் மட்டும் அல்ல மக்கள் மத்தி யில் மகிழ்ச்சி என்ற உணர்வை விதைத்து செல்கின்ற நாள். இதனை திருநாள், பெருநாள் என்றும் அழைக்கப்படும். பண்டிகைகள் வரலாற்றில் நடைபெற்ற நிகழ்வு களை நினைவுபடுத்தும் முகமாக கொண்டாடப்படுகின்றது.

தமிழர்களின் வாழ்வியலில் பண்டிகை என்பது முக்கியமானது ஒன்று அவை அவர்களின் இரத்தத் தோடு இரண்டறக் கலந்து விட்டன. பண்டிகைகள் கலாச்சாரத்தையும், பண்பாட்டையும், சமூக வாழ்க்கை முறைகளையும் பிரதிபலிப்பதாக அமைகின்றது. பிரதேசத்துக்குப் பிரதேசம் வேறுபட்ட வகையில் இவை கொண்டாடப்பட்டாலும் அதன் நோக்கம் ஒன்றாகவே காணப்படுகின்றது.

அண்மைக் காலத்தில் தமிழர்களின் முக்கிய பண்டிகையான தீபாவளி பண்டிகைக்கான தயார் படுத்தல் பரபரப்பாக இடம்பெறுகின்றது. வீட்டில் பலகாரங்கல் என்ன செய்யலாம் என அம்மா ஒரு பக்கமும், தீபாவளிக்கு விடுமுறை என்ற மகிழ்ச்சியில் பிள்ளைகளும் , வேலை செய்பவர்களும். நண்பர்கள் வீட்டுக்கு செல்வதற்கு திட்டமிடுகின்ற மாணவர்கள், இந்த முறை நல்ல ஆடை எடுக்க வேண்டும் என பெண்கள் என்று வீடு பரபரப்பாக இயங்கிக் கொண்டிருப்பதை காணக்கூடியதாக உள்ளது.

ஆம் ஒவ்வொருதரும் பண்டிகை என்றால் பிரச்சினைகள் இல்லாமல் வாழ்க்கை சந்தோசமாக அமைய வேண்டும் என எதிர்பார்க்கின்றனர். ஒவ் வொரு பண்டிகை காலப் பகுதிகளிலும் அவர்கள் இதனையே இறைவனிடம் வேண்டுகின்றனர்.

நானும் அம்மா ஏன் தொடர்ந்து அழைத்து கொண்டிருக்கின்றார் என யோசித்து விட்டு அம்மா விற்கு அழைப்பை போட்டேன். நான் "கலோ" என்று சொல்ல முன்பே " 20 ஆம் தேதி தீபாவளி நாங்க இங்க ஆடைகள் எடுத்து விட்டோம் நீ உனக்கு எடுத்துக் கொண்டு வாம்மா அப்பிடியே பேரப்பிள்ளைகளுக்கும் எடுத்துக்கொண்டு வா" எனக் கூறிவிட்டு அழைப்பை துண்டித்திருந்தார். நமக்கு இருக்கும் ஆர்வத்திலும் அதிகமாக வீட்டில் பெற்றோர்கள் பண்டிகைகளை தமது பிள்ளைகளுடன் கொண்டாடுவதில் மிகுந்த ஆர்வத்தை செலுத்துகின்றனர். என மனதுக்குள் நினைத்துக் கொண்டு மீண்டும் அழைப்பை ஏற்படுத்தி னேன் "அம்மா தீபாவளிக்கு இன்னும் நாள் இருக்கு தானே ஏன் இப்பவே உடுப்பு எடுக்க சொல்றீங்க". "அட இன்னும் கொஞ்சநாள் தான் இருக்குது நீ இப்பவே உடுப்ப எடுத்துக் கொள் இல்லாட்டி பேந்து எடுக்க மாட்டாய்" என்று கூறினார் .

அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என சமூகத் தில் பண்டிகை காலமெனின் இலகுவாக தெரிந்து கொள்ளலாம். பண்டிகை என்பது ஒரு நாள்தான் ஆனால் சமூகத்தில் அதற்கான நடவடிக்கைகள் ஒரு மாதத்திற்கு முன்பே மக்களால் எடுக்கப்படு கின்றது. குறிப்பாக சமூக ஊடகங் களின் இதனுடைய தாக்கம் அதிக மாக உள்ளது. வியாபாரிகள் தமது கடைகளில் பண்டிகை காண சிறப்பு விலை கழிவுகளை கொடுத்துக் கொண் டிருக்கின்றனர். ஓரிரு கடை என்றா லும் தெரியாது ஆனால் சமூக ஊடக ங்களை பயன்படுத்தி அதிகள வான கடைகளில் மலிவு விற்பனை செய்வதை மக்க ளுக்கு தெரியப்படுத்துகின்றனர். அவர்கள் தங்களுடைய முக புத்தகங்களில் அதன் பதிவுகளை போட்டு மக்களை தயார் படுத்துகின்றார்கள். இவர்கள் ஒரு புறம் இருக்க தீபாவளிக்குப் பட்டாசு, தீபாவளி இலத்திரனியல் உபகரணங்கள், பலகாரங்கள் என பொருள்களை வாங்க செய்வதில் விளம்பரங்கள் அதிக பங்கெடுக்கின்றன. பண்டிகைக்காக மக் களின் மனதை தயார்படுத்திக் கொண்டிருக்கின் றது.

ஆரம்ப காலத்தில் பண்டிகையின் போது நாட் காட்டியில் பண்டிகை நாளகளை குறித்து வைத்து ஞாபகப்படுத்தினோம். பண்டிகைக்கு முதல் நாள் வீட்டில் அனைவரும் ஒன்று கூடி பலகாரங்களை செய்து முறையாக பண்டிகையை கொண்டாடினர். கடிதங்கள் மூலம் வாழ்த்துக்களை அனுப்புவது, உறவினர் வீடுகளுக்கு செல்வது, நண்பர்களை சந்திப்பது, மாலைப் பொழுதில் விளையாடுவது என மகிழ்ச்சியாக கொண்டாடப்பட்டது. ஆனால் நவீன உலகில் கடை வியாபாரிகள் மக்களுக்கு பண்டிகைகளை ஞாபகப்படுத்துகின்றனர். கல் விக்காக வேலைக்காக என உறவினர்களை விட்டு வேறு வேறு நாடுகளில் வசிக்கின்ற இளைஞர்கள் குறுஞ்செய்திகளை மட்டும் அனுப்பி விடுகின்ற நிலைக்கு மாறி உள்ளது.

இந்தப் பண்டிகைகள் சமூகத்தில் பல மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. தனி மனித ரீதியில் புத்துணர்ச்சி, ஆன்மீக நம்பிக்கை, மன்னிப்பு, நல்லிணக்கம் மற்றும் நன்றியுணர்வு போன்ற மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. தொடர்ந்து வேலை செய்து கொண்டிருக்கின்ற ஒருவர் பண்டிகை நாளில் தனக் கான ஒரு விடுமுறையை பெற்றுக் கொள்வர் தனது குடும்பத்தோடு மகிழ்ச்சியாக பொழுதை போக்குவர். தனது உறவினர்களோடு மனம் திறந்து கலந்துரை யாடுவர். இவ்வாறு பண்டிகைகள் மனக்கசப்பை நீக்கி உறவினர்கள் மத்தியில் புதிய தொடர்பாடலை ஏற்படுத்துகின்றது.

சமூக நடத்தையில் பண்டிகைகள் எவ்வாறான மாற்றத்தை ஏற்படுத்துகின்றன. என்கின்றபோது ஆன்மீக வழிபாடுகளில் ஈடுபட செய்கின்றது, உற வினர்களுடன் உரையாடல், புதிய பொருள்களை வாங்குதல், குடும்பத்தோடு நேரத்தை செலவழித் தல், பண்பாட்டை பேணுதல், அடுத்த தலைமுறை யினருக்கு கற்றுக்கொடுத்தல், தமது பண்பாட்டை கடத்துதல் போன்ற விடயங்களில் மக்களை ஈடுபட

# பண்டிகைகாலத்து சமூகமாற்றம்!

வைக்கின்றது.

தெருவோரங்களில் எங்கு பார்த்தாலும் தீபாவளிக்கான பொருள்கள் வாங்குவதில் மக்கள் பரபரப்பாகச் செயற்பட்டுக் கொண்டிருப்பதைப் பார்க்க கூடியதாக இருக்கின்றது. வேறு நாடுகளில் இருக்கும் உறவினர்கள் அழைப்பை ஏற்படுத்தி பண்டிகையை முன்னிட்டு மகிழ்ச்சியாக உரையாடுவதோடு அவர்களுக்காக புத்தாடைகளை எடுத்து கொடுத்து சமூக உறவுகள் மீண்டும் ஒரு இணைப்பை ஏற்படுத்துவதாக பண்டிகைகள் அமைகிறது.

கடை வியாபாரிகளை பொறுத்தவரையில் வியாபாரத்தின் மூலம் அதிக வருவாயை பெற்றுக் கொள்ளும் நாளாகும். பண்டிகை தினங்களிலும் அதிக வேலைகளைச் செய்கின்ற நிலைக்கு தள்ளப்படுகின்றனர். பண்டிகை நாள்களை முன்னிட்டு கடைகளில் அதிக வியாபாரம் நடைபெறுவதால் தமக்கு நம்பிக்கையானவர்களை வேலைக்கு எடுத்தல் குடும்பத்தவர்கள் மாறி நிற்றல் என சில பிரச்சினைகளையும் எதிர்கொள்ள வேண்டி ஏற்படுகின்றது.

வெளியூரில் நிற்பவர்களுக்கு , பிரயாணத்தில் அதிக அளவு பயணிகள் செல்ல வேண்டி இருப்பதால் பலர் வீட்டுக்குச் செல்வது கடினமாக இருக்கும். முதியோர் இல்லம் சிறுவர் இல்லங்கள், மாற்றுத்திறனாளிகள் இல்லங்கள் போன்ற இடங்களில் பல உதவிகளை மக்கள் விரும்பி செய்வதால் மனிதாபிமான பண்பு வளர்க்கப்படுகின்றது. சிலர் இல்லங்களுக்கு சென்று தமது மகிழ்ச்சியை அவர்களுடன் பகிர்ந்து கொள்கின்ற போது முதியவர்கள் மத்தியிலும் சிறுவர்களிடத்திலும் ஏக்கம் நிறைவேற்றப்படுகின்றது.

சிலர் பண்டிகை காலத்தை முன்னிட்டு தமது வீட்டை புதிப்பித்தல் , சுத்தம் செய்தல் என ஒரு மாதத்துக்கு முன்பே அதற்கான வேலைப்பாடுகளை செய்கின்றனர். இவ்வாறு பண்டிகை காலமானது சமூகத்தில் ஆழமான மாற்றத்தை விதைத்து செல்கின்றது. கட்டமைப்பு, பொருளாதாரம், ஆன்மீக நம்பிக்கைகள் என அனைத்திலும் ஒரு ஆழமான மாற்றத்தை விதைக்கின்றன.

## அனைவர் வாழ்விலும் இன்பமுண்டாகட்டும்!

### இந்துக் குருமார் அமைப்பு தீபாவளிச் செய்தியில் தெரிவிப்பு



தீபம் ஏற்றி வழிபடுவது எமது சமயத்தில், சமூகத்தில் முற்காலம் முதற்கொண்டு காணப்படுகிறது. ஓர் தீபத்தை ஒளிரச்செய்ய வேண்டுமானால் அதற்கு ஆரம்ப ஒளிஷூட்டும் சக்தி ஒன்று தேவை.

அந்த முதல் சக்தியே, ஒளியே பரமாத்மா என்கிறோம். அதனால் ஒளி பெறும் மற்ற விளக்குகள் ஜீவாத்மாக்கள் என பார்க்கிறோம். ஜீவராசிகள் எல்லாவற்றிற்கும் பரம்பொருளே ஆதார ஒளியாகும். இதை உணர்த்தும் வகையில் தான் தீபாவளி பண்டிகை காணப்படுகிறது.

இவ்வாறு இந்துக் குருமார் அமைப்பு விடுத்துள்ள தீபாவளிச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்துக் குருமார் அமைப்புத் தலைவர் சிவாகம கலாநிதி சிவஸ்ரீ கு.வை. க. வைத்தீஸ்வர குருக்கள், செயலாளர் சிவஸ்ரீ ச. சாந்தஷரூப குருக்கள் ஆகியோர் இணைந்து விடுத்துள்ள வாழ்த்தில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

குடும்பம் என்றாலும் சரி சமூகம் சார்ந்த நிலையிலும் சரி தேசம் சார்ந்த நிலையிலும் சரி முதல் ஒளி, முதல் சக்தி சிறப்புடன் அமைய வேண்டும்.

எமது தேசத்தில், குறிப்பாக தமிழ் மக்கள் கடந்து வந்த தடம் மிகவும் கடினமானது. தற்காலம் கூட இக்கடினகாலம் வேறு வகையில் தொடர்கிறது.

குறிப்பாக ஒரு மனிதனை பூரணமாக்குவது கல்வி. இக் கல்வி நிலையில் முன்னைய காலத்தினைவிட பின்தங்கிய நிலையில் உள்ளோம். இதுபோலவே பல்வேறு நிலைகளில் நாம் காணப்படுகிறோம். இந்த நிலை மாற வேண்டும். இதற்காக நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.

இனிவரும் காலங்களில் ஒவ்வொருவரது வாழ்விலும் இன்பமுண்டாகட்டும். ஒவ்வொருவர் வாழ்விலும் வளமும் நலமும் பலமும் பெற்று இன்பகரமாக வாழ வேண்டும் என அன்பே உருவான பரம்பொருளின் பாதம் பணிந்து பிரார்த்தனை செய்து மனமார்ந்த நிறைந்த நல்வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் இந்துக் குருமார் அமைப்பின் சார்பில் பகிர்ந்து மகிழ்ச்சி அடைகிறோம். – என்றுள்ளது.

# மானிடப் பிறப்பின் மகத்துவத்தை அறிந்து இந்தப் பிறவியில் நல்லதைக் கற்று வாழ்வோம்

## செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் தீபாவளி வாழ்த்தில் தெரிவிப்பு



இந்தப் பிறவியில் நல்லவற்றை கற்று நல்ல வண்ணம் வாழ்ந்து பிறர் வாழ நல்லன செய்வதே நம் கடனாகும்.

அதற்குரிய கருணை, இரக்கம், அரவணைப்பு அனைவரிடமும் உருவாகவேண்டும்.

இவ்வாறு செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் விடுத்துள்ள தீபாவளி வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்து மக்களின் இனிய பண்டிகைகளில் ஒன்று தீபாவளி. நரகாசுரன் என்ற அசுரன் அழிக்கப்பட்டு எல்லோரும் இன்புற்று வாழ கிருஷ்ண பரமாத்மா வழிதந்த நாள் இந்தத் திருநாள் ஆகும். இந்தப் புனித நாளில் சகலரும் ஆலயங்களுக்கும் சென்று வழிபாடு செய்யுங்கள். வீடுகளில் மங்கல விளக்கேற்றி எல்லோரும் மகிழ்ச்சியாக வாழவேண்டும் என்று மன்றாடுங்கள்.

நீதியும் நிலையான தர்மமும் எங்கும் பிரகாசிக்க அனைவருக்கும் இதய பூர்வமான தீபாவளி நல்வாழ்த்துகள் உரித்தாகுக.

ஈழத்திருநாட்டில் எம் மக்கள் நிறைவாக வாழ இறையருள் கைகூட வேண்டும். எமது இளைய தலைமுறை கல்வியிலும் ஏனைய துறைகளிலும் மீண்டும் சிறக்க இந்நாளில் அனைவரும் பிரார்த்திப்போம்.

மனிதநேயமற்ற மாசுகள் எம்மைச் சூழ்ந்து உலாவுகிறது. அவற்றில் போதைப் பொருள் முதலிடம் வகிக்கிறது. இக் கொடூரம் எம் மண்ணில் இருந்து முற்றாக விடுபட தெய்வங்களை வேண்டுகிறோம்.

அரிய பிறப்பாகிய மானிடப் பிறப்பின் மகத்துவத்தை அனைவரும் அறிந்துகொள்ள வேண்டும். இந்தப் பிறவியில் நல்லவற்றைக் கற்று நல்ல வண்ணம் வாழ்ந்து பிறர் வாழ நல்லன செய்வதே நம் கடனாகும்.

அதற்குரிய கருணை, இரக்கம், அரவணைப்பு அனைவரிடமும் உருவாக வேண்டும். தீபத் திருநாளாகிய ஒளியை நோக்கி நல் வழியில் பயணம் செய்வோம்.– என்றுள்ளது.

# மக்கள் அனைவரதும் இதயங்களிலும் நல்வாழ்வும் செழிப்பும் நிறையட்டும்!

## வடக்கு ஆளுநர் நா.வேதநாயகன் தீபாவளி வாழ்த்துச் செய்தியில் தெரிவிப்பு



ஒளியின் திருநாளாகிய தீபாவளி, இருளை அகற்றி ஒளியைப் பரப்பும் நல்வழியைக் குறிக்கின்றது. தீமையை வீழ்த்தி நன்மை வெற்றிபெறும் நினைவூட்டலாகவும், அன்பு, ஒற்றுமை மற்றும் அமைதி நிலவும் சமூகத்தை உருவாக்கும் ஊக்கமாகவும் இந்தப் பண்டிகை விளங்குகிறது.

இவ்வாறு வடக்கு ஆளுநர் நா.வேதநாயகன் விடுத்துள்ள தீபாவளி வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நம் மனத்தில் இருந்தும் சமூகத்தில் அருந்தும் இருளை – அறியாமை – பொறாமை – தீமை அகற்றி ஒளியை அறிவு – அன்பு – நம்பிக்கை – பரப்பும் திருநாளாகும். இந்த இனிய நாளில், ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் நம்பிக்கையும் சந்தோஷமும் ஒளி வீசட்டும்.

வடக்கு மாகாண மக்களுக்கு நான் இதயம் கனிந்த தீபாவளி நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நாளின் ஒளி அனைவரின் இதயங்களிலும் நல்வாழ்வையும் செழிப்பையும் நிரப்பட்டும்.

இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்.– என்றுள்ளது.

# மக்களது வாழ்வில் ஒவ்வொரு தருணமும் வெற்றி, ஆரோக்கியம் நிரம்பியதாக மலரட்டும்

## தீபாவளி வாழ்த்துச் செய்தியில் ஜீவன் தொண்டமான்



மக்கள் அனைவரின் வாழ்விலும் ஒவ்வொரு தருணமும் வெற்றி, ஆரோக்கியம் மற்றும் மகிழ்ச்சி நிரம்பியதாக இருக்க வேண்டும்.

இவ்வாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் விடுத்துள்ள தீபாவளி வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தீப ஒளியில் இருள் விலகுவது போல், உங்கள் வாழ்விலும் துன்பம் விலகி இன்பம் நிலைத்திருக்கட்டும். இந்த தீபாவளி பண்டிகை உங்கள் வாழ்வில் புதுமையான ஒளிகளை கொண்டு வந்து, மகிழ்ச்சியையும் முன்னேற்றத்தையும் ஏற்படுத்தட்டும்.

எமது நாட்டைச் சூழ்ந்துள்ள இருள் அகன்று, நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் ஒளிமயமான எதிர்காலம் பிறக்க நாம் அனைவரும் ஒன்றுபட வேண்டிய தருணம் இதுவாகும். தீபாவளி பண்டிகையானது எம்மிடத்தில் ஒற்றுமை மற்றும் ஐக்கியத்தின் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது. ஆகையால், எமது மலையக மண்ணின் மறுமலர்ச்சிக்காகவும் நாம் ஒன்றுபட வேண்டும்.

மேலும் நாம், எதைச் செய்தாலும் பாதுகாப்பு என்பது எமக்கு மிக முக்கியமானதாகவும். தீபாவளியை பாதுகாப்பாகவும் மகிழ்ச்சியுடனும் கொண்டாடுவோம். இல்லாதவர்களுக்கு நம்மிடமுள்ளதை பகிர்ந்து, அவர்களின் முகத்திலும் புன்னகையை மலரச் செய்வோம். நாடெங்கும் அன்பும் அமைதியும் தழைக்கட்டும். வேற்றுமை அகன்று ஒற்றுமை ஓங்கட்டும்.

மகிழ்ச்சியான இந்த தீபாவளி நாளில் அனைவரின் வாழ்விலும் வளமும் நலமும் பெருகட்டும். இறைவன் அனைவருக்கும் ஆரோக்கியம், அமைதி மற்றும் செழிப்பு அருளட்டும். அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துகள்.– என்றுள்ளது.

# மக்களது வாழ்வில் இன்பங்கள் பெருகட்டும்!

## யாழ். மாநகர சபையின் உறுப்பினர் திருமதி சுகிர்தராஜ் சரஸ்வதி தீபாவளிச் செய்தியில் தெரிவிப்பு



மக்கள் அனைவரது வாழ்விலும் துன்பங்கள் நீங்கி, இன்பங்கள் பெருக வேண்டும். அனைவரின் வாழ்விலும் நலமும் வளமும் பெருகட்டும். அறியாமையால் ஏற்படும் இருளை அகற்றி அனைத்துத் துறைகளிலும் வெற்றி கிடைக்க வேண்டும்.

இவ்வாறு யாழ்.மாநகர சபையின் உறுப்பினர் திருமதி சுகிர்தராஜ் சரஸ்வதி விடுத்துள்ள தீபாவளி வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மக்கள்அனைவருக்கும்இனியதீபாவளிநல்வாழ்த்துகள். இந்த தீபத் திருநாள் உங்கள் வாழ்வில் ஒளியைப் பரப்பட்டும்.

உங்கள் வாழ்க்கையில் ஒவ்வொரு தருணமும் வெற்றி, ஆரோக்கியம், மகிழ்ச்சி நிறைந்ததாக மலரட்டும். துன்பங்கள் நீங்கி, இன்பங்கள் பொங்கட்டும். தீபாவளி கொண்டாட்டம் உங்கள் மனதில் அன்பு, அமைதி, சந்தோஷம் என அனைத்தையும் பரப்பும் ஒரு அழகிய ஒளியை வீசட்டும். உங்கள் ஒவ்வொருவரது வீட்டிலும் மகிழ்ச்சியும் செல்வமும் நிறைந்திருக்கட்டும். தீபங்களின் ஒளி உங்கள் வாழ்வில் அன்பையும் ஒற்றுமையையும் பெருக்கட்டும்.

ஒளிமயமான எதிர்காலம் பிறக்க, வீடெங்கும் ஒளியூட்டி தீபாவளியைக் கொண்டாடுவோம் . இந்த தீபாவளி உங்கள் குடும்பத்துக்கு அமைதி, சுகம், ஆரோக்கியம் மற்றும் வளம் ஆகியவற்றை கொண்டு வரட்டும். ஒளியின் திருநாளில் நம் குடும்பத்தில் எப்போதும் சந்தோஷமும் ஒற்றுமையும் நிலவட்டும்.

அக இருள் நீங்கி, ஒளிமயமான வாழ்வு பிரகாசிக்க வேண்டும் என்று தீபங்களால் நம் மனங்களில் ஒளியேற்றுவோம்.

தீபத் திருநாளன்று புதிய ஆடைகளை அணிந்து வாழ்வு சிறக்க கடவுளை வணங்கி, உற வினர்களோடும் பகிர்ந்துண்டு மகிழ்வார்கள்.

பகிர்ந்துண்ணல், பகைமை ஒழித்தல், மற்றையவர் நலம் பேணுதல், வேற்றுமையில் ஒற்றுமை காணுதல், இன, மத , குல , அந்தஸ்து பேதங்களை தவிர்த்தல் என்பன மூலம் தீபாவளித் திருநாள் ஓர் ஒற்றுமைத் தினம் என்பதாகவும் கருதப்படுகின்றது.

மக்கள் அனைவரது வாழ்விலும் துன்பங்கள் நீங்கி, இன்பங்கள் பெருக வேண்டும். அனைவரின் வாழ்விலும் நலமும் வளமும் பெருகட்டும். அறியாமையால் ஏற்படும் இருளை அகற்றி அனைத்துத் துறைகளிலும் வெற்றி கிடைக்க வேண்டும்.

தீபங்கள் ஜொலிக்க, பட்டாசு வெடிக்க, புதுதுணி உடுத்தி, மகிழ்ச்சியுடன் இந்த நாளை நீங்கள் கொண்டாட என் இனிய தீபாவளி வாழ்த்துகள். – என்றுள்ளது.

# மக்கள் அனைவரின் வாழ்விலும் நலமும் வளமும் பெருகட்டும்!

## தீபாவளி வாழ்த்துச் செய்தியில் மருதபாண்டி ரமேஸ்வரன்

தீபாவளி பண்டிகை உற்சாகத்துடன் கொண்டாடப்படும் இந்த இனிய வேளையில், இலங்கையில் வாழும் என் சக இந்துக்களுடன் எனது இதயம் கனிந்த தீபாவளி வாழ்த்துக்களைப் பகிர்ந்து கொள்வதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

இவ்வாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும் நுவரெலியா மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ரமேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தீப திருநாளை முன்னிட்டு அவர் விடுத்துள்ள வாழ்த்து செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

“தமஸோ மா ஜ்யோதிர்க் கமய மருத்யோர்மா அம்ருதம் கமய”

என்னும் வேத வாக்குக்கு இணங்க, இருளிலிருந்து பேரின்பப் பேரொளிக்கு அழைத்துச் செல்லும் நாளே தீபாவளி தினமாகும். தனது கொடுஞ்செயல்களால் மக்களை பெருந்துன்பத்துக்கு ஆளாக்கிய கொடிய அரக்கனான நரகாசுரனை திருமால் அழித்த தினமே தீபாவளி பண்டிகையாக கொண்டாடப்படுகிறது.

இறக்கும் தருவாயில் இருந்த நரகாசுரன், “நான் மறைந்த இந்த நாள் மக்கள் மனதில் நிற்க வேண்டும். என்னுடைய பிடியிலிருந்து விடுபட்ட தேவர்களும், மக்களும், இந்த நாளை இனிப்பு வழங்கி, வெடி வெடித்து கொண்டாட வேண்டும்” என இறைவனிடம் வேண்டிக் கொண்டதற்கு இணங்க தீபாவளி கொண்டாடப்படுகின்றது எனவும் ஐதீகம் மேலும் கூறுகின்றது.

மறம் வீழ்ந்து, அறம் வென்ற நாளாகவும், தீமைகள் அழிந்து நன்மைகள் பெருகிடும் நன்னாளாகவும் தீபாவளி திருநாள் விளங்குகிறது.

தீபத் திருநாளன்று, மக்கள் அதிகாலை எண்ணெய்க் குளியல் முடித்து, புத்தம் புதிய ஆடைகளை அணிந்து, தீபாவளி என்ற சொல்லின் பொருளுக்கேற்ப இல்லங்களில் வரிசையாகத் தீப விளக்கேற்றி, தங்கள் வாழ்வு சிறக்க கடவுளை வணங்கி, பல வகையான இனிப்புகளையும் பலகாரங்களையும் நண்பர்களோடும் உற வினர்களோடும் பகிர்ந்துண்டு, பட்டாசுகளை வெடித்து தீபாவளி பண்டிகையை மக்கள் உற்றார் உறவினர்களுடன் கோலாகலமாக கொண்டாடுவார்கள்.



இதுபோல் உலகெங்கும் வாழும் இந்துக்கள் தீபாவளி திருநாளை கொண்டாடுகின்றனர். இவ்வாறான சிறப்பு மிக்க தீபாவளி திருநாளானது, மனிதனுக்குப் பல்வேறு உண்மைகளை உணர்த்தி நிற்கின்றது. மக்கள் மனதில் இருக்கின்ற அகங்காரம், பொறாமை , தீய எண்ணம், குரோதம், பழிவாங்கல் போன்ற பல்வேறுபட்ட தீய எண்ணங்கள் நீங்க வேண்டும். அறியாமை என்ற மாயை அகன்று, அறிவு மிக்கவர்களாக மாற வேண்டும்.இருளிலிருந்து ஒளியை நோக்கி நகர வேண்டும்.

பகிர்ந்துண்ணல், பகைமை ஒழித்தல், மற்றையவர் நலம் பேணுதல், வேற்றுமையில் ஒற்றுமை காணுதல், இன, மத , குல , அந்தஸ்து பேதங்களை தவிர்த்தல் என்பன மூலம் தீபாவளித் திருநாள் ஓர் ஒற்றுமைத் தினம் என்பதாகவும் கருதப்படுகின்றது.

நம் அனைவரது வாழ்விலும் துன்பங்கள் நீங்கி, இன்பங்கள் பெருக வேண்டும். வாழ் நாள் பூராவும் மகிழ்ச்சி பெருக்கெடுத்து ஓட வேண்டும். இந்த தித்திக்கும் தீபாவளித் திருநாளில், மக்கள் அனைவரின் வாழ்விலும் நலமும் வளமும் பெருகட்டும். அறியாமையால் ஏற்படும் இருளை அகற்றி அனைத்துத் துறைகளிலும் வெற்றி, ஒற்றுமை, ஆரோக்கியம் மற்றும் மேம்பாட்டை உருவாக்கட்டும்.

எனவே இந்தத் தீபாவளி திருநாள் மலையக மக்கள் அனைவரின் வாழ்விலும் இருளை அகற்றி வளர்ச்சியையும் வெற்றியையும் ஏற்படுத்தட்டும்.- என்றுள்ளது.












# நடுநிசியில் காரைதீவுக்குள் புகுந்து தனியன் காட்டு யானை அட்டகாசம்

## பாரிய சேதம் மக்கள் அல்லோல கல்லோலம்!!

(வி.ரி. சகாதேவராஜா)

ஒட்டுமொத்த ஊரே உறங்கிக் கொண்டிருந்த நடுநிசி வேளையில் ஊருக்குள் நுழைந்த காட்டு யானை அந்த பிரதேசத்தை துவம்சம் செய்து வெளியேறியது. மக்கள் விடிய விடிய பீதியுடன் அல்லோல கல்லோலப்பட்டனர்.

இச்சம்பவம் அம்பாறை மாவட்டத்தில் உள்ள காரைதீவுக் கிராமத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 1.15 மணி அளவில் இடம் பெற்றது.

காரைதீவு மேற்கே உள்ள வயல் பகுதியில் இருந்து திடீரென உள் நுழைந்த தனியன் யானை ஒன்று கண்ணகி அம்மன்ஆலயகவடாவளவிற்குள்புகுந்து பின் மதிலை உடைத்துக் கொண்டு ஊர்மனைக்குள் புகுந்தது.

ஊர் குடிமனைப்பகுதியில் மக்கள் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்த வேளையில் ஐந்து வீடுகளின் எல்லை மதில்களை உடைத்து சந்திரகுமார் என்பவரின் களஞ்சிய அறையிலிருந்த நெல்லை உறிஞ்சிக் குடித்தது.

அப்பகுதியில் இருந்த வாழை, தென்னை, மரவள்ளி போன்றவற்றை சரித்து உண்டு துவம்சம் செய்தது .

மக்கள் செய்வதறியாது உயிரை கையில் பிடித்துக் கொண்டு நடுநிசியில் ஓட்டம் பிடித்தனர் .

அந்தப் பிரதேசமே நடுநிசியில் அல்லோல கல்லோலப்பட்டது. நாய்களும் குரைக்க யானை மதம் பிடித்து ஓடத் தொடங்கியது.

நிலைமை மோசமாகியது. அந்த யானை தொடர்ந்து வளவுகளுக்குள்ளால் மதிலை உடைத்துக் கொண்டு சென்று மீண்டும் வயலை சென்றடைந்தது.

மக்கள் விடிய விடிய பீதியுடன் பொழுதைக் கழிக்க நேர்ந்தது.

தெய்வாதீனமாக உயிரிழப்பு ஏற்படவில்லை.

பெரும் சேதத்தை எதிர்கொண்ட சந்திரகுமார் என்பவர் கூறுகையில் –

“நாம் ஆழ்ந்த நித்திரையில் இருந்த பொழுது திடீரென பாரிய சத்தம் கேட்டது. புயல் அடிக்குதோ என் நினைத்து எழுந்து பார்த்த போது பெரும் கரிய உருவத்துடன் யானை ஒன்று நின்றது. ஒரு கணம் ஈரற்குலை நடுங்கியது. இப்படி அது சேதம் விளைவிக்கும் என்று எதிர்பார்க்கவில்லை. பீதி கொண்டு ஓடினோம். இந்த சேதத்திற்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டும். மற்றும் யானை வராமல் மக்களை பாதுகாக்க வேண்டும். உரிய அதிகாரிகள் விரைந்து செயல்பட வேண்டும். இல்லாவிட்டால் பல உயிர்களையும் இழக்க வேண்டி நேரிடும்.” – என்றார்.















# ‘வேண்டாம், வேண்டாம், பொய் வாக்குறுதி!’ என்ற சுலோகத்துடன் முத்துநகர் போராட்டம்

(ஏ.எச்.ஹஸ்பர்)

திருகோணமலை முத்து நகர் விவசாயிகள் 33 ஆவது நாளாகவும் நேற்று சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் தருணத்தில் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவினால் தீர்வுக்காக வழங்கப்பட்ட கால அவகாசத்திற்கு நேற்றுடன் இறுதி நாள் முடிகின்றது எனவும் அந்த விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

தங்களது விவசாய நிலத்தை அபகரித்து தனியார் கம்பனிகளுக்காக சூரிய மின் சக்தி உற்பத்திக்கு வழங்கப்பட்டதை கண்டித்து அவர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

“வேண்டாம் வேண்டாம் பொய் வாக்குறுதி” எனும் பிரதான சுலோக அட்டையை காட்சிப்படுத்தியவாறு முத்து நகர் விவசாயிகள் தீர்வு வேண்டி போராடி வருகின்றனர்.

பரம்பரை பரம்பரையாக விவசாயம் செய்து வந்த காணியை அபகரித்ததால் சுமார் 352 ஏழை விவசாய குடும்பங்கள் நடுத்தெருவில் இறக்கப்பட்டுள்ளனர். தேசிய மக்கள் சக்தியின் ஆளும்தரப்பு மீது விவசாயிகள் நம்பிக்கையிழந்த நிலையில் பெரும் மன உளைச்சலுக்கு உள்ளாகி அன்றாட ஜீவனோபாயம் இழந்த நிலையில் தொடர் சத்தியாக்கிரக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

திருகோணமலை சீனக்குடா விமான நிலையத்துக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவை இந்த விவசாயிகள் பேரணியாக வந்து சந்திக்க முயன்ற போதிலும் சந்திக்க முடியாத நிலை ஏற்பட்டதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

தங்களுக்கான நிரந்தர தீர்வை விரைவாக வழங்குமாறும் பிரதமர் மற்றும் ஜனாதிபதியிடத்தில் இவ் விவசாயிகள் கோருகின்றனர்.











# மண்மேடு சரிந்து விழும் அபாய நிலையில் லிந்துலையில் லயன் குடியிருப்பில் மக்கள்

(முஸ்கெலியா விசேட நிருபர்)

லிந்துலை கேம்பிரி மேற்பிரிவு தோட்டத்தில் 24 வீடுகளைக் கொண்ட தொடர் குடியிருப்பு பின்புறத்தில் மண்மேடு சரிந்து விழும் அபாய நிலை காரணமாக 21 குடும்பங்களை சேர்ந்த 66 பேர் தொடர்ந்து அச்ச நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

அத்தோடு 2012 ஆம் ஆண்டு அப்பகுதியில் பாரிய அளவிலான மண்மேடும் சரிந்து விழுந்து உள்ளது. இதுவரை சரிந்து விழுந்த மண்ணை அப்புறப்படுத்தவில்லை. குடியிருப்பு பகுதியில் ஊற்று நீர் வடிந்து விடுவதால் எப்போதும் மண் சரிவு ஏற்படும் என்ற அச்ச நிலையில் மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

13 வருடங்களுக்கு முன்பு இந்த குடியிருப்பில் வாழும் மக்களைப் பாதுகாப்பான இடத்தில் குடியமர்த்துமாறு இயற்கை அனர்த்த மத்திய நிலைய அதிகாரிகளால் அறிவுறுத்தல் வழங்கப்பட்ட போதிலும் இதுவரை எந்த ஒரு நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை. தற்போது பிரதேசத்தில் தொடர்ந்து மழை பெய்து வருகின்ற நிலையில் நேற்று முன்தினம் குடியிருப்பு பகுதியில் பின்புறத்தில் ஒரு பகுதி மண் சரிந்து விழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தற்போது மத்திய மலைநாட்டில் நுவரெலியா மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் கன மழை காரணமாக எந்நேரத்திலும் இந்த குடியிருப்பு பகுதிகளில் உள்ள பாரிய மண் திட்டுகள் சரிந்து விழும் அபாயம் உள்ளது.

இந்த மண் திட்டுகள் இரவு நேரத்தில் சரிந்து விழும் பட்சத்தில் பாரிய உயிர் சேதங்கள் ஏற்படும் என அந்த தொடர் லயின் குடியிருப்புகளில் வாழ்ந்து வரும் தொழிலாளர்கள் பீதியுடன் தெரிவித்தனர்.

இது குறித்து சம்பந்தப்பட்ட தோட்ட நிர்வாகம் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்க போன்றோர் உடன் கவனம் செலுத்தி பாதிக்கபட உள்ள மக்களின் நலன் கருதி மாற்றுக் குடியிருப்புகள் அமைத்து கொடுக்க முன் வர வேண்டும் எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

# செவ்வந்தியுடன் கைதானவரின் தகவலுக்கமைய ரி - 56 ரக தோட்டாக்கள் 50 கண்டுபிடிப்பட்டன



இஷாரா செவ்வந்தியுடன் கைது செய்யப்பட்டு தற்போது தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள “கம்பஹா பபா” வழங்கிய தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் 50 தோட்டாக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

மஹபாகே அதிவேக வீதியின் 18ஆம் மைல்கல் பகுதியில் புதைக்கப்பட்டிருந்த நிலையில் ரி -56 வகை தோட்டாக்கள் கண்டுபிடிக்கப்பட்டன என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த தோட்டாக்கள் கெஹெல்பத்தர பத்மேவினால் வழங்கப்பட்டதாக பேலியகொடை குற்றத்தடுப்பு பிரிவில் தடுத்துவைக்கப்பட்டுள்ள “கம்பஹா பபா” குறிப்பிட்டுள்ளார்.

சந்தேகநபரிடம் தொடர்ந்தும் விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இஷாரா செவ்வந்தியை 90 நாள்கள் தடுத்து வைத்து விசாரிக்க அனுமதி பெற்றுள்ளதாக பொலிஸ் தெரிவித்துள்ளனர்.

நேபாளத்திற்கு தப்பிச்சென்று தலைமறைவாகியிருந்த நிலையில் கைது செய்யப்பட்ட இஷாரா செவ்வந்தி கொழும்பு குற்ற விசாரணை பிரிவில் தடுத்து வைத்து விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.








# உறுகாமம் பகுதியில் பிரதேசசபை உறுப்பினரின் வீட்டின் ஒரு பகுதி முழுமையாகவே எரிந்து நாசம்

**(வாலகிருஸ்ணா)**

மட்டக்களப்பு கரடியனாறு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உறுகாமம் பகுதியில் உள்ள பிரதேசசபை உறுப்பினர் ஒருவரின் வீட்டில் ஏற்பட்ட தீ காரணமாக வீட்டின் ஒரு பகுதி முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

உறுகாமம் பகுதியில் அமைந்துள்ள இலங்கை தமிழரசுக் கட்சியின் ஏறாவூர்பற்று – செங்கலடி பிரதேச சபை உறுப்பினர் சி. சர்வானந்தனின் வீட்டிலேயே இந்தத் தீப் பரவல் சம்பவம் ஏற்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தீப்பற்றியதற்கான காரணம் இதுவரை உறுதிப்படுத்தப்படாத நிலையில் வீட்டில் இருந்த பொருள்கள், கதவு, ஜன்னல், கூரை என வீட்டில் சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் வீட்டு உரிமையாளரான சி.சிவானந்தன் கரடியனாறு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கரடியனாறு பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

இதேநேரம் தீசம்பவம் இடம்பெற்ற வீட்டிற்கு வாழைச்சேனை பிரதேசசபையின் தவிசாளர் சுதாகரன் மற்றும் ஏறாவூர்ப்பற்று பிரதேசபை உறுப்பினரும் ஊடகவியலாளருமான செ.நிலாந்தன் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

சம்பவம் தொடர்பில் முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் இதன்போது கோரிக்கை முன்வைத்தனர்.















# நுவரெலியா மாவட்டத்தில் கடும் மழை

(மஸ்கெலியா நிருபர்)

மத்திய மலைநாட்டில் நுவரெலியா மாவட்டத்தில் கடந்த சில நாள்களாகப் பெய்து வரும் மழையால் பல்வேறு இடங்களில் அதிக அளவில் நீர் வரத்து ஏற்பட்டு உள்ளது.

குறிப்பாக சிவனொளிபாத மலை உச்சியில் இருந்து படிக்கட்டுகள் வழியாக அதிக அளவில் மழையால் நீர் வரத்தும் அதிகரித்துள்ளது.

தற்போது வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் அதிக எண்ணிக்கையில் சூரிய உதயம் பார்க்க நள்ளிரவு வேளையில் சிவனடி பாத மலைக்குச் சென்று அதிகாலையில் சூரிய உதயம் பார்ப்பது வழக்கம்.

இவ்வாறு வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் மற்றும் உள்நாட்டு உல்லாசப் பயணிகள் மலைக்குச் செல்லும் போது கன மழை பெய்யும் பட்சத்தில் மலைக்கு செல்ல வேண்டாம் என நல்லதண்ணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் மஸ்கெலியா பிரதேச சபையின் தவிசாளர் பணிப்புரை வழங்கி வருகின்றனர்.

மேலும் மலைப்பகுதியில் உள்ள அனைத்து காட்டாறுகளும் வெள்ள பெருக்கு ஏற்பட்டு அதிக அளவில் நீர் வரத்து ஏற்பட்டு உள்ளது.

இதனால் அவற்றில் நீராட செல்ல வேண்டாம் எனக் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளது

பண்டிகை காலம் என்பதால் இப் பகுதியில் உள்ள நீர் தேக்கங்கள் மற்றும் நீர் வீழ்ச்சி பகுதியில் நீராடுவது தவிர்க்க வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.

நேற்று மதியம் முதல் மத்திய மலை நாட்டில் நுவரெலியா மாவட்டத்தில் கன மழை பெய்தது வருகிறது. இதன் காரணமாக நீர் தேக்கப் பகுதியில் உள்ள அனைத்து நீர் தேக்கங்களுக்கும் நீர் வரத்து அதிகரித்துள்ளது.

அதிகளவில் பனி மூட்டம் காணப் படுவதால் வாகன சாரதிகள் வாகனங்களை மிகவும் அவதானமாக செலுத்துமாறு மஸ்கெலியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி புஷ்பகுமார வேண்டுகோள் விடுத்துள்ளார்.









# மரம் நடுகைத் திட்டத்திற்கென வழங்கப்பட்ட காணியில் சட்டவிரோத கனிய மணல் அகழ்வு

(பூ.லின்ரன்)

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று பகுதியில் இயற்கை சமநிலையை பேணுவதற்க்கான நிரந்தர மரநடுகை திட்டம் எனும் பெயரில் 2017 காலப்பகுதியில் சுமார் பத்து ஏக்கருக்கு அதிகமான பரப்பளவில் ஆரம்பிக்கப்பட்ட மரம் நடுகை திட்டக் காணியில் தொடர்ச்சியாக சட்டவிரோத மணல் அகழ்வுகள் இரவிரவாக இடம் பெற்று வருவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பான தகவல்களை தாம் வெளிப்படையாக தெரிவித்தால் தமது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படலாம் என்ற அச்சத்தில் மக்கள் தகவல்களை வெளியிடுவதற்கு அச்சமடைகின்றனர். எனினும் தமது சுற்றுச்சூழல் பாதிப்படைந்துகொண்டிருப்பதாக இரகசிய தகவல்களை வெளியிட்டுள்ளனர்.

இயற்கை சமநிலையை பேணுவதற்கான நிரந்தர மரநடுகை திட்டத்தை செயற்படுத்துவதற்கு வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகமே காணியை வழங்கியதாகவும் இதனால் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகம் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் பிரதேச மக்கள் குறிப்பிடுகின்றனர்.

# தீபாவளி விடுமுறை சமயத்தில் நுவரெலியாவிற்கு போதைப்பொருள்களுடன் வந்த 18 பேர் கைது!

(மஸ்கெலியா விசேட நிருபர்)

நீண்ட வார விடுமுறை மற்றும் தீபாவளியை முன்னிட்டு நுவரெலியாவுக்கு சென்றிருந்த 18 பேர், பல்வேறு வகையான போதைப்பொருள்களுடன் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 18 முதல் 28 வயதுக்குட்பட்டவர்கள் என்றும், அவர்கள் தெமட்டகொட, கம்பஹா, கொழும்பு உள்ளிட்ட நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்களிடம் குஷ், ஹெராயின், ஐஸ், போதை மாத்திரைகள் மற்றும் சட்டவிரோத வெளிநாட்டு சிகரெட்டுகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதானவர்களில், ஃபேஸ்புக் ஊடாக ஒழுங்கமைக்கப்பட்ட விருந்துபசாரத்துக்காக நுவரெலியாவுக்கு வந்திருந்த குழுவினரும் அடங்குகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் மோப்ப நாய் பிரிவின் உதவியுடன், நுவரெலியாவுக்குள் பிரவேசிக்கும் அனைத்து பிரதான வீதிகளிலும் அமைக்கப்பட்டிருந்த சோதனைச் சாவடிகளின் மூலம் இவர்கள் கைது செய்யப்பட்டனர் என நுவரெலியா தலைமையகப் பொலிஸெ தெரிவித்தனர்.

# ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 100 மில்லியன் டொலர் கடன் உதவி




நாட்டின் சுகாதாரத்துறை அபிவிருத்திக்காக ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 100 மில்லியன் டொலர்களை கடனாகப் பெறுவதற்கான இருதரப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருப்பதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தக் கடன் நிதியானது சுகாதார சேவை வழங்கலின் செயற்திறனை மேம்படுத்துவதற்கு ஏதுவான தேசிய செயற்திட்ட உருவாக்கம் மற்றும் தரமான சுகாதார சேவையில் சகலரும் உள்வாங்கப்படுவதை உறுதிப்படுத்தல் என்பவற்றுக்குப் பயன்படுத்தப்படும் என நிதியமைச்சின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்தோடு தொற்றுநோய்ப்பரவல் தடுப்பு, முற்கூட்டிய தயார்ப்படுத்தல் மற்றும் தொற்றுநோய்ப்பரவலின் பின்னரான துலங்கல் என்பவற்றுக்கான நடவடிக்கைகளும் இக்கடன் நிதியின் ஊடாக முன்னெடுக்கப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.






# வல்வெட்டித்துறை படுகொலை சம்பவத்திற்கு 4.5 பில்லியன் ரூபா இழப்பீட்டுக் கோரிக்கை

## சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்டம் பரிந்துரை

இந்திய அமைதிகாக்கும் படையினர் 1989 ஆம் ஆண்டு வல்வெட்டித்துறையில் நிலை கொண்டிருந்த சமயம் வல்வைப் படுகொலை சம்பவத்தில் கொல்லப்பட்டவர்கள், காயமடைந்தவர்கள் மற்றும் சொத்திழப்புகளுக்காக 4.5 பில்லியன் இலங்கை ரூபா இழப்பீட்டினை வழங்க வேண்டும் என சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்டம் பரிந்துரைத்துள்ளது.

இந்த இழப்புகளுக்கான இழப்பீட்டு அறிக்கை வெளியீட்டு நிகழ்வு மற்றும் கடந்த மார்ச் மாதம் வெளியிடப்பட்ட “வல்வெட்டித்துறை ஒரு படுகொலையின் வாக்குமூலங்கள்“ அறிக்கையின் நூல் வெளியீட்டு நிகழ்வும் யாழ் வடமராட்சி ஊடக இல்லத்தில் செயலாளர் இரா. மயூதரன் தலைமையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு இடம்பெற்றது.

வல்வெட்டித்துறை பிரஜைகள் குழுவின் அனுசரணையுடன் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்ட அமைப்பினரால் தயாரிக்கப்பட்டுள்ள வல்வெட்டித்துறை படுகொலை சம்பவத்தின் போது நிகழ்ந்த இழப்புகளுக்கான இழப்பீட்டு பரிந்துரை அறிக்கையினை வல்வெட்டித்துறை பிரஜைகள் குழு செயலாளர் ந. அனந்தராஜ் வெளியிட்டு வைத்தார்.

முன்னதாக வல்வைப் படுகொலை சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. இதன்போது மாவீரர் ஒருவரின் தந்தை சுந்தரலிங்கம் பொதுச்சுடரினை ஏற்றியதை தொடர்ந்து பங்கேற்றிருந்தவர்களும் மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தினர். தொடர்ந்து ந.அனந்தராஜ் மலர்தூவி அஞ்சலி செலுத்தியிருந்தார். தொடர்ந்து ஏனையவர்களும் மலரஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்து ந.அநந்தராஜ் இழப்புகளுக்கான இழப்பீட்டு அறிக்கையினை வெளியிட்டு வைத்தமையுடன் நூலையும் வெளியிட்டு வைத்தார். நூலின் முதற்பிரதியை பருத்தித்துறை நகராட்சி மன்ற தவிசாளர் வின்சென் டீ போல் டக்ளஸ் போல் பெற்றுக்கொண்டதை தொடர்ந்து அதன் பிரதி மற்றும் இழப்பீட்டு பரிந்துரை அறிக்கை என்பன பங்கேற்றிருந்த பிரதிநிதிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில், வல்வெட்டித்துறை பிரஜைகள் குழு செயலாளர் ந.அனந்தராஜ், பருத்தித்துறை நகரசபை தவிசாளர் வின்சென் டீ போல் டக்ளஸ் போல், தமிழரசு கட்சி பதில் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன், சாவகச்சேரி நகராட்சிமன்றஉபதவிசாளர்ஞா.கிஷோர், பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் உதயகுமார் யுகதீஸ், கரவெட்டி பிரதேச சபை உப தவிசாளர் தி.தயாபரன், வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச தலைவர் த.சந்திரதாஸ், உப தலைவர் நா.வர்ணகுலசிங்கம், பருத்தித்துறை வர்த்தகர் சங்க செயலாளர் மயூரன், காணி உரிமைகள் அமைப்பை சேர்ந்த முரளிதரன், வடமராட்சி ஊடக இல்ல தலைவர் கு.மகாலிங்கம் உள்ளிட்ட உறுப்பினர்கள் மற்றும் பருத்தித்துறை வர்த்தகர் சங்க நிர்வாக உறுப்பினர்கள், பாதிக்கப்பட்ட பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.















# நிமலராஜனின் 25ஆம் ஆண்டு நினைவேந்தல் உணர்வுபூர்வமாக நேற்று ஊடக அமையத்தில்!

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நிமலராஜனின் 25 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ் . ஊடக அமையத்தில், அமையத்தின் தலைவர் கு.செல்வக்குமார் தலைமையில் நடைபெற்றது.

நிமலராஜனின் திருவுருவப் படத்திற்கு "குரல் அற்றவர்களின் குரல்" அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் முருகையா கோமகன் மற்றும் செயற்பாட்டாளரும் ஊடகவியலாளருமான பெடிகமகே மலர் மாலை அணிவித்தனர், தென்னிலங்கை ஊடகவியலாளர் அஜித் பொது சுடரேற்றியமையைத் தொடர்ந்து, ஊடகவியலாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் மலரஞ்சலி செலுத்தினர்.

போர் சூழலில் யாழில் இருந்து ஊடகப்பணியாற்றிய மயில்வாகனம் நிமலராஜன். பி.பி.சி.யின் தமிழ் மற்றும் சிங்கள சேவை, வீரகேசரி, ராவய போன்ற ஊடகங்களில் பணியாற்றி இருந்தார்.

அந்நிலையில் 2000ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 19ம் திகதி யாழ். மாவட்டத்தில் ஊரடங்கு சட்டம் அமுலில் இருந்த வேளை இவரது வீட்டு வளவினுள் புகுந்த ஆயுத தாரிகள், வீட்டின் ஜன்னல் ஊடாக அவர் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டனர்.

அதன் போது அவர் எழுதிக்கொண்டு இருந்த கட்டுரை மீது வீழ்ந்தே உயிர் துறந்தார்.

கொலையாளிகள் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டு நிமலராஜனை படுகொலை செய்த பின்னர், வீட்டின் மீது கைக் குண்டுத் தாக்குதலையும் மேற்கொண்டனர்.

அதன் போது வீட்டில் இருந்த நிமலராஜனின்தந்தைசங்கரப்பிள்ளைமயில்வாகனம், தாய் லில்லி மயில்வாகனம் மற்றும் மருமகன் ஜெகதாஸ் பிரசன்னா ஆகியோர் படுகாயமடைந்தனர்.

இந்த படுகொலை சம்பவம் நடைபெற்று 25ஆண்டுகள் கடந்துள்ள போதிலும் , இதுவரையில் குற்றவாளிகள் கண்டறியப்படவில்லை. நிமலராஜன் படுகொலைக்கு நீதி கோரி யாழ் . ஊடக அமையம் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் தொடர்ச்சியாக குரல் கொடுத்தே வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# நேற்று தீபாவளிக் கொள்வனவு அமோகம்

## புதுக்குடியிருப்பில்.........













(பா.சதீசன்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியில் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு மக்கள் நேற்று அதற்கான தயாரிப்புகளில் உற்சாகத்துடன் ஈடுபட்டனர்.

வீடுகளை அலங்கரித்தல், புதிய உடைகள் வாங்குதல், இனிப்புகள் மற்றும் பழங்கள் போன்றவற்றை கொள்வனவு செய்தல் போன்றவற்றில் மக்கள் முனைப்புக் காட்டினர். இதனால் நகர் பகுதியில் வழமைக்கு மாறாக பெரும் கூட்டம் காணப்பட்டது.

அத்துடன், வீதியோர வியாபாரிகளும் சிறப்பு சலுகைகள் வழங்கி விற்பனையில் தீவிரமாக ஈடுபட்டனர். தீபாவளியை முன்னிட்டு புதுக்குடியிருப்பு முழுவதும் ஒரு பண்டிகை பரவசம் நிலவுவதை அவதானிக்க முடிந்தது.

# நேற்று தீபாவளிக் கொள்வனவு அமோகம்

## வவுனியாவில்....!















**(கி.வசந்தன்)**

தீபாவளி திருநாளை முன்னிட்டு வவுனியாவில் நேற்று வியாபாரம் களை கட்டியிருந்தது. நகரில் அதிக சனநெரிசல்களையும் அவதானிக்க முடிந்தது.

இன்றைய தினம் உலகம் முழுவதும் உள்ள இந்துக்கள் தீபாவளி திருநாளைக் கொண்டாடும் நிலையில் அதற்கான முன்னாயத்தத்துக்காக வவுனியா நகரிற்கு அதிக எண்ணிக்கையான மக்கள் வருகை தந்து புத்தாடைகள், பட்டாசுகள், இனிப்பு பண்டங்களை கொள்வனவு செய்தமையை அவதானிக்க முடிந்தது.

கடந்த வருடத்தை விட இம் முறை தீபாவளி வியாபாரம் களை கட்டியிருந்தது. மக்கள் தீபாவளி கொண்டாட்டத்திற்கு ஆர்வத்துடன் தயாராகி வருவதை நேற்றே அவதானிக்க முடிந்தது.

# நேற்று தீபாவளிக் கொள்வனவு அமோகம்

## யாழில் மழைக்கு மத்தியில்....!





**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கொட்டும் மழைக்கு மத்தியிலும் தீபாவளிக் கொண்டாட்டத்திற்காக பண்டிகை வியாபாரங்கள் நேற்று படு சுறுசுறுப்பாக இடம்பெற்றது.

தற்போது நிலவும் பருவ மழைக் காலத்தின் மத்தியிலும் தீபாவளித் திருநாளை முன்னிட்டு புத்தாடைக் கொள்வனவில் மக்கள் அதிக கவனம் செலுத்தினர்.

இவ்வாறு மக்களின் அதிக எதிர்பார்ப்பையடுத்து பருவ கால தற்காலிக கடைகள் நகரின் புறநர்ப் பகுதியான கோட்டை முற்றவெளியில் மாநகர சபையால் வழங்கப்பட்டிருந்தது.

பருவ கால விற்பனைச் சூழலில் அதிக மழையின் மத்தியிலும் மக்கள் முண்டியடித்து கொள்வனவில் நேற்று ஈடுபட்டிருந்தமைச்சி காண முடிந்தது.

# மாணவர்களுடன் வந்த பஸ் கவிழ்ந்ததில் 12 பேர் காயம்




**(உடப்பு க.மகாதேவன்)**

ராகம, பட்டுவத்தையில் இயங்கும் ரயில் பாதை அருகிலுள்ள பட்டுவத்தை பகுதியில் இன்று நேற்றுப் பிற்பகலில் பள்ளி மாணவர்கள் சென்ற பஸ் ஒன்று கவிழ்ந்ததில், மாணவர்கள் 9 பேர் உட்பட 12 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சபுகஸ்கந்த பகுதியில் அமைந்துள்ள ஒரு பாடசாலையைச் சேர்ந்த சிறுவர்கள், பட்டுவத்தை மத்திய கல்லூரியில் நடைபெற்ற ஜாம்போரி நிகழ்வில் கலந்து கொண்டு மீண்டும் திரும்பிக் கொண்டிருந்தபோது இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

# கோப்பாய் வீட்டிலிருந்து வெளியேற்றப்பட்ட பொலிஸார் கல்வியங்காடு பாடசாலையில்!

**(ந.லோகதயாளன்)**

கோப்பாய் பொலிஸாரின் பயன்பாட்டில் இருந்த தனியார் வீட்டில் இருந்து வெளியேறும் பொலிஸார் கல்வியங்காடு ஞானோதயா பாடசாலையில் குடிபுகுகின்றனர்.

தனியாருக்குச் சொந்தமான காணியில் அத்துமீறிக் குடியிருந்த கோப்பாய் பொலிஸாருக்கு எதிராக நில உரிமையாளர்கள் தொடுத்த வழக்கை விசாரித்து வந்த யாழ்ப்பாணம் நீதிமன்றம் அக்காணியை உரிமையாளரிடம் கையளிக்க உத்தரவிட்டதற்கு அமைய பொலிஸார் அக் காணியை உரிமையாளர்களிடம் கையளித்தனர்.

இவ்வாறு வீட்டுடன் கூடிய காணி கையளிக்கப்பட்டதனால் ஏறபட்ட இட நெருக்கடியை தீர்க்கவே பொலிஸார் தங்குவதற்கான பாவனைக்கு ஞானோதயா பாடசாலையைப் பொலிஸார் பயன்படுத்தவிருக்கின்றனர்.

இவ்வாறு பாடசாலை பொலிஸாரின் பாவனைக்கு வழங்கியமை தொடர்பில் கல்விஅமைச்சின்அதிகாரிகளைதொடர்பு கொண்டு கேட்டபோது, ஆளுநரின் அனுமதியின் பெயரில் 6 மாத காலங்களிற்கு தற்காலிகமாக இது வழங்கப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

இப்பாடசாலை சில காலம் இயங்காமல் இருந்தமை குறிப்பிடத்தக்கது.



# நவம்பர் 6, 11 இல் பிஹார் சட்டப்பேரவை தேர்தல் 24 ஆம் திகதி பிரசாரத்தை தொடங்குகிறார் மோடி

மொத்தம் 243 உறுப்பினர்களைக் கொண்ட பிஹார் சட்டப்பேரவைக்கு நவம்பர் 6, 11 ஆகிய திகதிகளில் 2 கட்டங்களாக தேர்தல் நடைபெற உள்ளது.

இதனையொட்டி பிரதமர் மோடி எதிர்வரும் 24 ஆம் திகதி பிரச்சாரத்தை தொடங்குகிறார். இது குறித்து பாட்னாவில் நேற்று செய்தியாளர்களை சந்தித்த பா.ஜ.க. மாநிலத் தலைவர் திலீப் ஜெய்ஸ்வால்,

“பிஹார் சட்டப்பேரவைத் தேர்தலை ஒட்டி பிரதமர் நரேந்திர மோடி அடுத்த வாரம் பிரச்சாரத்தை தொடங்குகிறார். இந்த மாத இறுதிக்குள் 4 பிரச்சாரப் பேரணிகளுக்கு திட்டமிடப்பட்டுள்ளது. முதலில் எதிர்வரும் 24 ஆம் திகதி சமஸ்திபுராவில் பிரச்சாரம் செய்கிறார். அன்றைய தினமே, பெகுசராயில் பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்கிறார்.” என்றார்.

பிஹார் தேர்தலில் பா.ஜ.க. மற்றும் ஜே.டி.யு. கட்சிகள் இரண்டும் தலா 101 இடங்களில் போட்டியிடுகின்றன. மத்திய அமைச்சர் சிராக் பாஸ்வான் தலைமையிலான லோக் ஜனசக்தி கட்சி (ராம் விலாஸ்) 29 இடங்களில் போட்டியிடுகிறது. உபேந்திர குஷ்வாஹா தலைமையிலான ராஷ்ட்ரிய லோக் மோர்ச்சா (ஆர்.எல்.எம்) மற்றும் மத்திய அமைச்சர் ஜிதன் ராம் மஞ்சி தலைமையிலான இந்துஸ்தானி அவாம் மோர்ச்சா (மதச்சார்பற்ற) ஆகிய கட்சிகளுக்கு தலா ஆறு இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

# நீதிமன்றம் தொடர்பில் அவதூறுப் பேச்சு; சீமான் மீது 2 பிரிவுகளில் வழக்குப் பதிவு

நீதிமன்றம் குறித்து அவதூறாக பேசிய புகாரில் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் மீது சென்னை திருமங்கலம் பொலிஸார் 2 பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்துள்ளனர். நீதிமன்ற உத்தரவை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் யூடியூப் சனல் ஒன்றுக்கு சீமான் அளித்த பேட்டியில், அவர் நீதித்துறையை அவமதிக்கும் வகையில் பேசினார் என வழக்கறிஞர் சார்லஸ் அலெக்சாண்டர் பொலிஸில் புகார் அளித்திருந்தார். இதன் மீது பொலிஸார் நடவடிக்கை எடுக்காததால், இதை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞர் சார்லஸ் மேல் முறையீடு செய்தார். இந்த மனுவை விசாரித்த நீதிபதி ஜி.கே.இளந்திரையன் புகார் மீது வழக்குப்பதிவு செய்ய உத்தரவிட்டார்.



நீதிமன்ற உத்தரவை அடுத்து, நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் மீது பொலிஸார் நேற்று என்.எஸ். பிரிவு 196 உட்பட 2 பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

# பெற்றோரை புறக்கணிக்கும் ஊழியருக்கு சம்பளத்தில் ஒரு பகுதி குறைக்கப்படும்

## தெலுங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டி அறிவிப்பு

பெற்றோரை புறக்கணிக்கும் அரசு ஊழியர்களுக்கு, அவர்களது சம்பளத்தில் ஒரு பகுதியை குறைக்க தெலுங்கானா அரசு தீர்மானித்துள்ளது.

தெலுங்கானாவில், அரசு பணிக்கு, தேர்வு செய்யப்பட்ட நபர்களுக்கு பணி நியமன கடிதம் வழங்கும் நிகழ்வு ஹைதராபாதில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிலையில் அதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே முதல்வர் ரேவந்த் ரெட்டி இதனை தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பிரச்சனைகளுடன் வரும் பொதுமக்களிடம் அரசு ஊழியர்கள் கருணையுடன் நடந்து கொள்ள வேண்டும் என்றும் பெற்றோரை அரசு ஊழியர்கள் புறக்கணித்தால், அவர்களது சம்பளத்தில், 10 முதல் 15 சதவீதம் வரை குறைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது என வும் இவ்வாறு பெறப்பட்ட தொகையை, ஊழியர்களின் பெற்றோர் வங்கி கணக்கில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

அதன்படி, ஊழியர்கள் சம்பளம்



பெறுவது போல் உங்கள் பெற்றோரும் மாத சம்பளம் பெறுவது, இதன் மூலம் உறுதி செய்யப்படும் எனவும் இது தொடர்பாக புதிய சட்டத்தை கொண்டு வர மாநில அரசு முடிவு செய்துள்ளத எனவும் தெரிவித்துள்ளார்.

# காசாவில் இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதலில் பலியானோரின் எண்ணிக்கை 18 ஆக உயர்ந்தது





காசா முழுவதும் இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் 18 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

காசாவில் நேற்று முன்தினம் காலை முதல் இஸ்ரேல் தொடர்ச்சியான தாக்குதல்களை முன்னெடுத்தது.

சமீபத்தில் நடத்தப்பட்ட தாக்குதலில் ஹமாஸ் தளபதி ஒருவரும் கொல்லப்பட்டார்.

இந்நிலையில் பெண் ஒருவர் உட்பட மொத்தமாக 18 பேர் பலியாகியுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, தெற்கு காசாவின் கிழக்கு கான் யூனிஸில் குறைந்தது 12 வான்வழித் தாக்குதல்கள் நடந்தன என கூறப்படுகிறது.

# போர் நிறுத்தத்தை இஸ்ரேல் அப்பட்டமாக மீறியுள்ளது

## ஹமாஸின் மூத்த உறுப்பினர் தெரிவிப்பு









போர் நிறுத்தத்தை இஸ்ரேல் அப்பட்டமாக மீறியுள்ளதாக ஹமாஸின் மூத்த உறுப்பினர் இஸ்ஸாத் அல் – ரிஷ்க் தெரிவித்துள்ளார்.

கட்டார் மற்றும் எகிப்து தலைமையிலான மத்தியஸ்த முயற்சிகளையும் தடம்புரளச் செய்யும் முயற்சியை இஸ்ரேல் முன்னெடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, காசாவிற்கு உதவி வழங்குவதை இஸ்ரேல் நிறுத்தி வைப்பதாக அறிவித்துள்ளது.

காசாவிற்கு உதவி வழங்குவதை, மறு அறிவிப்பு வரும் வரை நிறுத்தி வைப்பதாக இஸ்ரேல் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன .



ஹமாஸ் ஒப்பந்தத்தை வெளிப்படையாக மீறியதைத் தொடர்ந்து, அரசியல் பிரிவுகளின் உத்தரவுப்படி, காசா பகுதிக்கு மனிதாபிமான உதவிகளை அனுப்புவதை மறு அறிவிப்பு வரும் வரை நிறுத்தியுள்ளதாக அந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் -20.10.2025




இன்று உங்கள் உணர்வுகளையும் உணர்ச்சிகளையும் கட்டுப்படுத்த வேண்டும். சவாலான சூழ்நிலைகள் காரணமாக இன்று சமநிலை இழக்க நேரலாம். பொறுமையுடனும் நம்பிக்கையுடனும் இருக்க வேண்டும். நம்பிக்கையுடன் செயல்பட்டால் வெற்றி கிடைக்கும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். திறமையுடன் கவனமாக பணியாற்ற சில விஷயங்களை விட்டுக்கொடுக்க வேண்டும்.

பணியில் காணப்படும் பதட்டம் காரணமாக உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள். இத்தைகய சூழ்நிலைகளை தவிர்த்தல் நல்லது. சகஜமான அனுகுமுறையால் உறவின் நல்லிணக்கத்தை பராமரிக்கலாம்.




இன்று மகிழ்சிகரமான நாளாக இருக்காது. விரும்பியது கிடைக்கும் சூழ்நிலை காணப்படவில்லை. வளைந்து கொடுத்து போவதன் மூலம் நற்பலன்களைக் காணலாம்.

பணியிடத்தில் பணிகள் இறுக்கமாக காணப்படும். உங்கள் பணிகளை ஒழுங்குமுறையாக திட்டமிட்டு ஆற்ற வேண்டும்.

உங்களின் குழப்பமான மன நிலையை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க அத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் வேண்டும்.

நிதி வளர்ச்சி திருப்திகரமாக காணப்படவில்லை. பண இழப்பிற்கான சாத்தியம் உள்ளது.




இன்று உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும் நாள். இலக்குகளை அடைவதற்கான தன்னம்பிக்கை உங்களிடம் நிறைந்து காணப்படும். இன்று உங்கள் விருப்பங்கள் நிறைவேறும்.

உங்கள் பணியில் உங்கள் தனித்திறமையை வெளிப்படுத்துவீர்கள். உங்கள் செயல்திறனில் இது பிரதிபலிக்கும்.

உங்கள் துணையுடன் நட்பு முறையில் பழகுவீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமாக இருக்கும். எதிர்பாராத பண வரவுகள் காணப்படும்.

ஆரோக்கியக் குறைபாடு ஏதும் இருக்காது. முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




பொறுமை மற்றும் உறுதியை வளர்த்துக்கொள்ள வேண்டும். உங்கள்அணுகுமுறையில்வேகம்கூடாது. உங்கள் செயல்களை திட்டமிடுவதன் மூலம் வெற்றி காணலாம்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். சக பணியாளர்களின் ஆதரவு கிடைக்காது. அதனால் நீங்கள் உணர்ச்சிவசப்பட நேரலாம்.

உங்களின் எதிர்மறை உணர்வுகளை உங்கள் துணையிடத்தில் வெளிப்படுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். எனவே இதனை தவிர்த்தல் நலம்.

பணப்புழக்கம் சீராக இருக்காது. தேவையற்ற செலவுகள் காணப்படும். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.




இன்று மிதமான பலன்களே கிடைக்கும். கூடுதல் பொறுப்புகளுக்கு நேரம் செலவழிக்க நேரும். மனதில் குழப்பங்கள் காணப்படும்.

இன்று அதிக பணிகள் காணப்படும். நன்மையான பலன்கள் கிடைக்க திட்டமிடுதல் நல்லது.

உங்கள் துணையுடன் கவனமாக உரையாட வேண்டும். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொண்டால் உறவுப் பிணைப்பு வலுப்படும். உங்கள் துணையுடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளது.

இன்று கூடுதல் செலவினங்கள் காணப்படும். உங்கள் சேமிப்பு அதிகரிக்கும்.




இன்று எதிர்பார்த்த பலன்கள் கிடைக்காது. தீய விளைவுகள் ஏற்படாமல் இருக்க ஆழ்ந்து யோசித்து செயல்பட வேண்டும். பிறருடன் பேசும் போது வார்த்தைகளை கவனமாக பிரயோகிக்க வேண்டும்.

பணியிடத்தில் உங்கள் பணிகளை திறமையாக ஆற்ற முடியாதபடி ஏமாற்றங்களும் தடைகளும் காணப்படும். உங்கள் சக பணியாளர்களுடனான தகவல் பரிமாற்றம் திருப்திகரமாக இருக்காது.

உங்கள் துணையுடன் பொறுமை இழந்து காணப்படுவீர்கள். இன்றைய நாளை அமைதியாக கழிக்க இதனை தவிர்த்தல் வேண்டும். உங்கள் பிரியமானவருடன் உங்கள் அணுகுமுறையை மாற்றிப் பழகுங்கள்.




இன்று உங்கள் முயற்சிகளில் நல்ல பலன்கள் கிடைக்கும். நீங்கள் வெற்றி பெறுவதற்கான உறுதியுடன் காணப்படுவீர்கள். உங்களின் நம்பிக்கை உணர்வு உங்களை உச்சத்திற்கு அழைத்துச் செல்லும்.

பணியிடத்தில் முன்னேற்றம் காணப்படும். உங்கள் வளர்ச்சிக்கான புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

உங்கள் துணையுடனான உறவில் நெருக்கம் காணப்படும்.உங்களின்பரஸ்பரபேச்சில்அதுவெளிப்படும். இருவரும் நல்லுறவு கொண்டு மகிழ்வீர்கள்.

நிதிநிலையைப் பொறுத்தவரை இன்று அதிர்ஷ்டமான நாள். உங்கள் கையில் இருக்கும் உபரி பணத்தைக் கொண்டு நீங்கள் நீண்ட கால திட்டம் ஒன்றை தீட்டலாம்.




இன்று அனுபவித்து மகிழும் நாள். உங்கள் குழந்தைகளைப் பற்றி பெருமைப்படுவீர்கள். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பலன் தரும்.

புதிய வாய்ப்புகள் கிடைக்கும். அது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். பணியாற்றுவதை எளிதாக உணர்வீர்கள்.

உங்கள் துணையுடன் அன்பான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.உங்கள் துணையின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள்.

நிதி வளர்ச்சி மகிழ்ச்சிகரமாக இருக்கும். புதிய முதலீடு முயற்சிக்கு இன்றைய நாளை நீங்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ளலாம்.

இன்று ஆற்றலுடன் காணப்படுவீர்கள். எனவே உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் -20.10.2025




எதிர்பாராத நிச்சயமற்ற பலன்கள் காணப்படும். நன்மை மற்றும் தீமை இரண்டும் கலந்த பலன்கள் காணப்படும். சவால்களை சந்திக்க பொறுமை தேவை.

கவனக்குறைவு காரணமாக பணியில் தவறுகள் நேரலாம். திறமையுடன் செயலாற்ற மிகுந்த கவனம் தேவை.

உங்கள் துணையுடன் பேசும் போது களிப்பான மனநிலையில் எற்றுக் கொள்ள வேண்டும். அவரின் வார்த்தைகளை உன்னிப்பாக கேட்பதன் மூலம் உறவில் பிரச்சினைகளை தீர்க்கும்.

இன்று கூடுதல் செலவுகள் காணப்படும். எதிர்கால பாதுகாப்பு கருதி பணத்தை சேமிக்க வேண்டும்.




உங்கள் இலக்குகளை அடைவதற்கு சிறந்த நாள். எளிதாக உங்கள் இலக்குகளை அடைவீர்கள். அடிக்கடி பயணம் ஏற்படலாம். அது உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கலாம்.

உங்கள் பணியில் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள். இது உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும். உங்கள் பணிகளை உற்சாகமாக செய்வீர்கள்.

உங்கள் இருவரிடம் காணப்படும் பரஸ்பர புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையிடம் உங்கள் கருத்துக்களை மனம் திறந்து கூறுவீர்கள்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். உங்களின் கடின உழைப்பிற்கு கூடுதல் பணம் ஊக்கத்தொகையாக கிடைக்கும்.




இன்று அதிக சிந்தனையுடன் காணப்படுவீர்கள். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்வதன் மூலம் வெற்றி காணலாம். அமைதியாக இருக்கவேண்டும். தியானம் மேற்கொள்ள வேண்டும்.

பணி நிமித்தமான பயணங்கள் காணப்படும். அதிக பணிகள் காரணமாக சவாலான சூழ்நிலைகளை சந்திக்க நேரும். நீங்கள் சற்று சோர்வடைவீர்கள்.

உங்களிடம் காணப்படும் அகந்தை காரணமாக உங்கள் துணையுடன் தகவல் பரிமாற்ற பிரச்சினை காணப்படும். உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிக்க இதனை தவிர்த்தல் வேண்டும்.




இன்றைய நாள் சுறுசுறுப்பாக இருக்கும். உங்கள் இலக்குகளை எளிதில் அடையலாம். உங்கள் முயற்சியில் வெற்றிகளை எளிதாக அடையலாம். இதனால் உற்சாகமும் மகிழ்ச்சியும் காணப்படும்.

சக பணியாளர்கள் ஆதரவாகவும் உதவிகரமாகவும் இருப்பார்கள். உங்கள் திறமைகளை நிரூபிக்கும் விதமாக உங்கள் செயல்திறன் காணப்படும்.

உங்கள் துணையுடன் நட்பு முறையில் பழகுவீர்கள். இந்த அணுகுமுறை காரணமாக இருவருக்கும் இடையே நல்ல புரிந்துணர்வும் மகிழ்ச்சியும் பராமரிக்க முடியும்.

பணப்புழக்கம் போதுமானதாக இருக்கும். உங்களிடம் காணப்படும் உபரி பணத்தை நல்ல விஷயங்களுக்கு பயன்படுத்தலாம்.

# ஆளும் கட்சி என்ற அதிகாரத்தின் மமதையில் உள்ளூராட்சிச் சட்டங்களை மீறிவிட முடியாது

## இருபாலையில் தேசிய மக்கள் சக்திக்கும் தவிசாளருக்கும் இடையில் தர்க்கம்

உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்களையும் சட்டத்தையும் நாட்டின் ஆளும் கட்சி என்ற வகையில் அரசாங்கத்தில் உள்ளவர்கள் மீறி விட அனுமதிக்க முடியாது என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத. தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

இருபாலைச் சந்தியில் பஸ் தரிப்பிடம் ஒன்றை அமைப்பதற்காக பிரதேச சபையிடம் விண்ணப்பித்துவிட்டு அவ் விண்ணப்பத்தினை பரிசீலிப்பதற்காக பிரதேச சபை வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் போக்குவரத்துசபை போன்ற திணைக்களங்களின் பரிந்துரையை பெற்றுத்தரக் கோரியிருந்த நிலையில், இருபாலைச் சந்தியில் அந்த பஸ் தரிப்பு நிலையத்தினை ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ரஜிவன் தலைமையில் தேசிய மக்கள் சக்தியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் சிலர் திறந்து வைத்தனர்.

இந்நிலையில் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் உறுப்பினர்கள் பலர் தவிசாளரைத் தொடர்பு கொண்டு மேற்படி தரிப்பிடத்திற்கு சட்டப்படியாக தங்களினால் அனுமதியளிக்கப்பட்டுள்ளதா எனக் கேள்வி எழுப்பினர். இதனைத் தொடர்ந்து தவிசாளர் விண்ணப்பம் பரிசீலனையில் இருப்பதாகத் தெரிவித்தமையுடன் அவ்வாறாக சட்டப்படியான அனுமதியற்ற விடயத்தில் சட்டம், ஒழுங்கு சகலருக்கும் சமன் என்ற அடிப்படையில் தான் நடவடிக்கை எடுப்பார் எனவும் தெரிவித்தார்.

தவிசாளரினால் தரிப்பிடத்தின் பெயர்ப் பலகையை சேதமற்ற வகையில் அகற்றுவதுடன் உடனடியாக சபையைத் தொடர்புகொண்டு உரிய அனுமதியை பெற்றுக்கொள்ளுமாறு அறிவித்தல் ஒட்டுவதற்க பணிக்கப்பட்டது.

இதனையடுத்து சம்பவ இடத்தில் ஒன்று கூடிய தேசிய மக்கள் சக்தியின் பிரதேசசபையின் உறுப்பினர்களான சி.சுகிர்தரூபன், சி.கஜீபன் தாம் வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் அனுமதி பெற்றனர் எனவும், தவிசாளர் அரசியல் காரணங்களுக்காக செயற்படுகின்றார் எனவும் வாக்குவாதப்பட்டனர். தவிசாளருடன் நின்றிருந்த உறுப்பினர் அ.கமலறேகனுடனும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இவ்விடத்தில் தவிசாளர் விட்டுக் கொடுப்பின்றி பெயர்ப் பலகையைச் சேதாரமன்றி அகற்றுமாறும், அனுமதியை சபை வழங்கும் வரையில் அதைக் காட்சிப்படுத். முடியாது என்று கூறி அகற்றுவதற்கான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டனர்.

எனினும், அந்த பஸ் தரிப்பி நிலையத்தை ஞாபகமாக சமர்ப்பணம் செய்யப்பட்டவரின் மகன் தவிசாளரிடம் தனது தந்தையின் ஞாபகமாகவே அது அமைக்கப்பட்டதாகவும், தான் இவ்வாறான நடைமுறைகளை அறிந்திருக்கவில்லை எனவும், தனது இறந்த தந்தை தொடர்பான தமது குடும்பத்தின் மனிதாபிமானக் காரணத்தை அடிப்படையாகக் கொண்டு நடவடிக்கைகளை ஒத்திவைக்கக் கோரினார். மேலும் தாம் உடனடியாக அனுமதித. தேவையை முறைப்படி பூர்த்தி செய்யும் வரையில் அவகாசம் அளிக்கக் கோரியமையுடன் அதற்காக கடிதம் வழங்க சம்மதித்தமையையடுத்து பிரதேச சபையின் அனுமதியற்ற கட்டடத்திற்கு எதிரான நடவடிக்கைகள் ஒத்திவைக்கப்பட்டன.

"இவ்விடத்தில் நாட்டில் அதிகாரத்தில் உள்ளவர்கள் உள்ளூராட்சி மன்றங்களின் சட்டம், ஒழுங்குகளை மீறிவிட அனுமதிக்க முடியாது. அவர்களுக்கு உள்ளூராட்சி மன்ற விடயங்களில் புரிதல் கிடையாது ஆயின், அதற்கு ஆலோசகர்களை நியமித்து செயற்பட முடியும். நாட்டில் ஆட்சியில் உள்ளனர் என்பதற்காக சட்டம், ஒழுங்கை யாரும் வளைத்துப் போடக்கூடாது. எவருக்கும் மனிதாபிமானக் காரணங்களைத் தவிர எமது சபையின் சட்டம், ஒழுங்கு ஒரே விதமாகவே காணப்படும்" – என தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.